உ

குடும்பசனியன் என்னும்

அகவிடகடசம்சாரி.

இதன் விலை அணா 4.

ஜிஸ்டர் காபிரைட்.

முதற்பதிப்பு காபி 2000

இஃது

சிறுமணலூர்,

முனிசாமி முதலியாரால்

இயற்றப்பட்டு

தமது சென்னை:

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது.

1911.

பிரபஞ்ச உற்பத்தி.

தேவர் மனிதர் விலங்கு வர்ணுஸ்ரமம் உலகம்.

சகலஉற்பத்தியுமடங்கியது 640. சயிட்டு பெரியபுத்தகம்

1. உலகபேதம். பிரபஞ்சமென்னும் உலகவுற்பத்தி, உலகஅளவு, உலகத்தின் வயது, காலப்பிரமாணம், கற்பாந்தப்பிரளயம், நைமித்தியப்பிரளயம், பிராகிருதப் பிரளயம், பதினுன்குலோகப்பிரமாணம், அந்தந்தலோகங்களில் வசிக்கும் ஜீவராசிகள் ஆகாயத்தைச் சேர்ந்த அண்டங்களின் அளவு, அந்தந்த அண்டங்களில் வசிக்கும் தேவர்கள் கிரகங்கள் முதலிய ரூபநாம பேதங்கள், சுத்தத்திவுகளின் விஸ்திரணமும் அண்ட அளவு, பிரமாண்டக்குறிப்பு, முதலியனவும் அடங்கியிருக்கின்றன.

2. மதபேதம். இந்துமதமும் இதிலுள்ள நூறுகணக்கான சைவ வைணவ பேதங்களும், ஆஸ்திகமதம், நாஸ்திகமதம், பௌத்தமதம், சீனதேசமதம், சௌராஷ்டிரமதம், துலுக்குமதம், கிருஸ்து, ரோமர், கிரேக்கர், எகிப்த்து, ஸ்காந்திநேவியர், மெக்சிகோ, கினியா, பெனின், அட்ரு, கான்கோ, அங்கோலியர், அரக்கான், காப்பிரிகள் தார்த்தாரியர், ஜப்பான், சீயம், பெருவியன் ஜாவா, இலங்கைத்தீவார், பைகொ, பிலப்பியன், போர்நியோ, சுமித்திரா, மலாயா, லாப்லாந்தியர், மிசிசிபி, பிடலாடிரன், காரபிதீவார்மதம் முதலிய எல்லாமதபேதங்களும் அவரவர் வணங்கும் தெய்வ பேதங்களும் அதுகளுக்குறிய பூசை பலி முதலிய பேதங்களும் ஆலயபேதங்களும் இந்த பிரபஞ்சவுற்பத்தி என்னும் ஒரேபுத்தகத்திற் காணலாம்.

3. தேய்வபேதம். பிரம்மா, விஷ்ணு, ருத்திரன் முசலிய திருமூர்த்திகளின் அவதாரங்களும், அவர்களின் படை. கொடி, விருது மனைவி முதலிய காரணங்களும், கணேசர், சுப்பிரமணியர், நவக்கிரகங்கள், திக்குப்பாலர்கள், முதலாக முப்பத்து முக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணுயிரம் ரிஷிகள், அஷ்டவசுக்கள், கருடகாந்திருவர், சித்தவித்தியாதரர், அப்சரஸ்திரீகள் சரித்திரமும் கூறப்பட்டிருக்கின்றது.

இந்த பிரபஞ்சவுற்பத்தி என்னும் சாஸ்திரமானது தமிழ், தெலுங்கு, இங்கிலீஷ், துலுக்கு முதலிய எல்லாபாஷைகளிலுமிருந்து மொழிபெயர்த்து எழுதியது. இதை சகல ஜாதியாரும் சர்வமதத்தினரும் வாசிக்கத்தகுந்த பொதுவான்சாஸ்திரமென்றறிக.

இதன் விலை ரூபா **2.**

THE
ORIGIN OF THE WORLD
or the Secret of the Earth.

FACTS have been culled from ancient Vedas, Puranas and Hindu Shastras delineating and ancient religions, geographical information of the world. and translated into English for the use of the public. This work is divided into 3-pars 1st THE SECRET OF DEVAS 2nd THE SECRET OF THE WORLD, and the 3rd THE SECRET OF DIFFERENT RELIGIONS AND CASTES, comprising in all 360 pages of printed matter. The essential feature and main characteristic of the work is that it contains all about worldly affairs essential to be known to one and all, and hence it has been called the SECRET OF THE WORLD, and it is consequently recognised as a useful book even in America and Australia. * * *

1. THE SECRET OF THE WORLD:

Treatsof the Origin of the World, the extent, the reasons of the divisions of time into years, months and weeks, the time and duration of Deluge, the description of the layers of fourteen worlds, the varieties of the animal creation of each world, the extent of heavens and planetary systems the sphere of nine planets connected with astrological Zodiac, the extent of the seven oceans and other matters relating to ancient sientific lore.

2. THE SECRET OF DEVAS:

Treats of the origin of Trimurthis, Brahma, Vishnu, and Siva, the concurrent events connected with their wives, children, chariots, weapons— the ten incarnations of Maha Vishnu and the reasons thereof, the origin of Sundry gods, Ganapathi, Subramaniar, Devendra— guardian angels of cardinal points, the sun, the moon, 33 millions of gods, 48 thousand Rishis, their functions (individually, detailed) their respective armies ensigns, weapons and coat of arms— and the reasons there-of and the origin of the Goddesess— Kali— Parvathi, Lutchumi and Saraswati. * * * *

3. THE SECRET OF RELIGIONS AND CASTES:

Treats of the tenets of Hindu religion, the sub divisions of Hindu religion and their innate principles and dogmas, the description of Sivaism, Vishnuvaism, Deism, Athiesm,, Buddhism; and the sub-divisional facts relating to the above. The religion of China, Sowrashtra, Mahamedans, Christians, Romans, Scandinavians, Mexicans New Guineans or panpans, Benin, Atra, Congo, Angola, Greeks, Egyptians, Arrakan, Kaffirs, Tartars, Japanese, Siamese, Peruvians, Java, Lanka, Pegu, Philippines, Borneo, Sumatra, Malaya, Laplanders, and several other religions, the varieties and sub-divisions of races among the above, the respective gods woshipped by each, their mode of worship, sacrifice, Vows, Prayers, Temples and other religions restrictions extant among them. * * * * * * * * *

copy rupees 2.

இரு 200 நூறு

இரணூறுபுத்தகங்கள் ஒன்ருய்ச்சேர்ந்த

பலபாட்டுச்

சில்லரைக்கோர்வை.



பலபாட்டுச் சில்லரைக் கோர்வை என்னும் புத்தகமானது டிம்மி 16- பேஜ் அளவில் சைடுகளுள்ள பெரிய புத்தகம் 1400- சுமார்50 - 60 - வருடங்களுக்குமுன் னிருந்த பழைய வித்வான்கள் பாடிய பாட்டுகள் முதல் தற்காலத்துவித்வான்கள் பாடியவரையில் எல்லாக் கவிராயர்ளுடைய பாட்டு களும் அனேக பதிகங்களும் தோத்திரங்களும் கும்மிகளும் சிந்துகளும் ஜாவளிகளும் டப்பான்களும் ஏசல்களும் ஓடம் முதலான சகலமான பாட்டுகளும் ஒரேகோர்வையாய் அச்சிட்டு கலிக்கோபயிண்டு செய்திருக்கின்றது இந்தப் புத்தகங்களைத் தனித் தனியாக வாங்கினால் சுமார் 3—2—0 ரூபாய்க்கு மேலாகும் ஒரே கட்டடமாய் அச்சிட்டிருக்கின்றே மாகையால் வாங்குபவர்களுக்குச் சகாயமாய்க் அரை விலையாய் கொடுக்கப்படுகிறது.

கலிக்கோபயிண்டு விலைரூபா	1	8	0
ஷை தோல்பயிண்டு விலைரூபா	2	0	0

மதிகெட்டான் நாடகம்.

இந்திரன் மகனுகிய கொந்தி ராஜனென்பவன் மாதர்மோகத்திற் காதல் கொண்டவனுகி தொட்டுக்கெட்ட பத்மாசூரன்போலவும் தொடாமல் கெட்ட கர்ணன்போலவும் விட்டுக்கெட்ட மாபலிப்போலவும் விடாமல் கெட்ட ராவணன்போலவும் மதிகெட்ட மகாராஜனது அதி யற்புதமான நாடகம்.

இதன் விலை அணு-5.

கடவுள் துணை.

குடும்பசனியன்

என்னும்

அகடவிகடசம்சாரி.

கடவுள் வணக்கம்.

"கண்ணுக்கு மிடமெல்லாங் கடவுள்காப்பு," என்று அகத்தியர் திருவாய்மலர்ந்தபடி, இகபரங்களுக்குச் சொந்தக்காரனியாரோ, இருவினைக்கும் எட்டாதவன் யாரோ, பகலிரவுக்கு நடுவானவன்யாரோ, பாவபுண்ணியங்களுக்குப் பொதுவானவன் யாரோ, பிறப்பு யிறப்புக்கும் பெரியவன் யாரோ, உடலுமுயிருக்கும் உரியவன்யாரோ, கூட்டமான எண்பத்துநான்கு நூறாயிர ஜீவபேதங்களையும் ஊட்டிவளர்ப்பவன் யாரோ, ஆட்டிப்படைப்பவன் யாரோ, கடலானவன் யாரோ, காற்றானவன் யாரோ மேகமானவன் யாரோ, லோகமானவன் யாரோ, மலையானவன் யாரோ, லையானவன் யாரோ, உயிர்நாதன் யாரோ, உடல்நாதன்

ரோ, பல புவனங்களும், பல அண்டங்களும் சூழப்பெற்று அளவு கடந்த அண்டாண்ட பிரம்மாண்ட அகண்டாகார புவன சராசரங்களுக்கெல்லாம் பெரியவன் யாரோ, ஏகச்சக்ராதிபதியாரோ, பிறவாதவன் யாரோ, இரவாதவன் யாரோ ரிஷீஸ்வரர்களால் சிந்திக்கப்பட்டவன் யாரோ, சர்வதேவர்களாலும் துதிக்கப்பட்டவன் யாரோ, பதிவிரதைகளால் நினைக்கப்பட்ட பரமேஸ்வரன் யாரோ, உத்தமிகளுள்ளத்திலிருக்கும் உயர்நலமுடையவன் யாரோ, அப்பேர்க்கொத்த அப்பனது ஒப்பற்ற திருவடிக்கமலங்களை உள்ளமென்னுங் கோயிலில் அமரச்செய்து அன்பென்னும் வெள்ளத்தினால் அபிஷேகஞ்செய்து, அவாவென்னும் மலரினாலர்ச்சித்து, ஆத்துமமென்னும்தீபமேற்றி அபயமென்னும்மணியடித்து ஆசையென்னும் நைவேதனஞ்செய்து, தியானமென்னும் தியாகங்கேட்டு, மோனமென்னும்வீடுபெற்று, ஞானமென்னும் பூமிக்குள் குடியேறுமாறு எல்லாம்வல்ல கடவுளை அல்லும்பகலும் ஆசித்து நேசித்துப் பூசிப்போமாக.

நூல் துவக்கம்.

இல்லறம், குடும்பம், சம்சாரமென்று பெருமையாகப் பேசிக்கொள்வதெல்லாம் ஸ்திரீகளைப்பற்றியேயொழியபுருஷனைப்பற்றியேயல்ல. உலகத்தார் கலியாணமில்லாத ஏகாங்கிக்குச் செய்கிற உபகாரத்தைப்பார்க்கிலும் ஒருவன்குடும்பியாயும் சமுசாரியாயுமிருந்து கஷ்டப்பட்டால் அவன்விஷயத்தில் அதிகபச்சாத்தாபமும், இரக்கமும்வைத்து உபசரிக்கிறார்களே இதுவும் ஸ்திரீகளால் வருகிற நன்மையல்லவா.

அகராதி, திவாகரம், நிகண்டு முதலிய புஸ்தகங்களில் பெண்சாதிக்குச் சொல்லப்பட்ட பலபெயர்களாலும் அவளுடைய அருமையும் பெருமையும் விளங்குகின்றன. வீட்டுக்குடையவளாதலால் இல், இல்லாள், மனையாள், மனைவி,

கிரகினியென்றும், புருஷனுக்குப் பிரியமும் நேசமுமுள்ளவளாதலால் காதலி பிரியையென்னும், சகல பந்துவர்க்கங்களைப் பார்க்கிலும் புருஷனுக்கு அதிக உரிமையுள்ளவளானதால் உரிமை, கிழத்தியென்றும், குடும்பப்பிரதிஷ்டைசெய்பவளாதலால் குடும்பினியென்றும், குடும்ப பாரங்களையெல்லாம் வகிப்பவளாதலால் பாரியென்றும், வீட்டுக்கு எஜமானியானதால் தலைவி. நாயகியென்றும், பதிவிரதையானதால் பத்தினியென்றும், இகபரமிரண்டிலும் புருஷனுக்குத்துணை செய்பவளாதலால் துணைவிவாழ்க்கைத்துணையென்றும் பத்தினிக்குப் பல நாமங்கள் உண்டாயிருக்கின்றன.

மரக்கலத்தை ஆதரவாகக்கொண்டு கடற்கரை யேறுகின்றவர்களைப்போல புருஷன் இல்வாழ்க்கைக்குத் துணையாகக் கற்புடைய மனைவியைக்கொண்டு பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி முதலியயோரை உபசரித்தல், ஆதியாகிய அறங்களைச்செய்து மோட்சக்கரை யேறுதற்கு அவனுக்கு அவள் அனுகூலமாயிருந்து தெய்வகடாட்சத்தால் நல்லபுத்திரர்களைப்பெற்று புகழ்பெற வாழவேண்டும்.

அப்படியே புருஷனுக்குப் பெண்சாதிமே லிருக்கவேண்டிய அன்பையும், ஆசையும், நேசத்தையும் காட்டவேண்டியதற்காக அன்பன், ஆர்வலன், உரியோன், காதலன், நேசன், பிரியனென்றும் புருஷனுக்குப் பலபெயர்கள் உண்டாயிருக்கின்றன "அவலட்சணமே யவதரித்ததுபோலிருக்கிறவர்களுக்கு அழகம்மையென்றும், அதர்மத்துக்கே ஆலயமானவனுக்குத் தர்மராயனென்றும்" பெயர் கொடுத்ததுபோல, பிரியமென்கிற பிரசக்தியே யில்லாத ஸ்திரீ புருஷர்களுக்கு மேற்கண்ட பெயர்கள் பொருந்துமா? புருஷபாரியர்என்கிற அபிமான மில்லாதவர்களுக்கு பிரியன், பிரியையென்கிற பெயரை மாற்றி அப்பிரியன் அப்பிரியை என்கிறபெயர்களைக் கொடுப்பது உசிதமாயிருக்கின்றது.

"மன்னர்கள் ஆண்டதெல்லாம்
மந்திரிகள் மகிமை."

என்பதுபோல், ஒருகுடும்பத்திற்கு அரசியாயும், தலைவியாயும் சொத்து சுதந்தரம் முதலிய பாக்கியங்களை கையாளத்தகுந்த சொந்தமென்னும் பாத்தியதையும், மாமிக்குப்பின் மாமியார்பட்டதிற் குரியவளாகவும், செல்வனுக்கு வாய்த்த செல்விக்குத்தான் சம்சாரியென்றுபெயர். மண்ணுண்ட மன்னர்களின் நீதியைப்போல் தன் புருஷனையும், புருஷனைச்சேர்ந்த உடற்பிறப்புகளையும் தன்னையடுத்த பந்துக்களையும் பாரபட்சமின்றி ஒரேமுகமாய்ப் பார்த்து தன் குடும்பசங்கதிகளை வெளிப்படுத்தாமலும், தன்குடும்பத்தில் யாருக்கும் பொல்லாதவளென்று பெயரெடுக்காமலும் தானே தலைவியென்றும் அதிகாரியென்றும் காட்டிக்கொள்ளாமலும், ஆக்கும்போதும் அரிக்கும்போதும் வேலைக்காரியைப்போலும் பரிமாறும்போது பெற்றதாயைப்போலும் புருஷன் விசனப்படும்போது மந்திரியைப்போலும், வியாதி வந்தபோது வயித்தியனைப்போலும், பிள்ளைகளைச் சீர்திருத்தலின் பொருட்டு சத்துருவைப்போலும், கணவன் கலவியில் தாசியைப்போலவும், பக்தியில் திருவள்ளுவர்தேவியைப்போலவும், இத்யாதி குணங்களுடைய உத்தமஸ்திரீகளைத்தான் உத்தமிகளென்றும் பதிவிரதைகளென்றும் வாய்குளிரப்பலரும் சொல்வார்கள். சாட்சாத் இலட்சுமிஎன்றே சிலர்கையெடுத்துக் கும்பிடுவார்கள். இத்தலட்சுமி வாசஞ்செய்யும் கிரகத்திலேதான் அஷ்டலட்சுமியும் நேசஞ்செய்வார்கள்.

"ஆயிரங்காலத்துப்பயிர்" என்பதற்கடையாளம் இப்பேர்க்கொத்த நல்ல குணமும், லட்சுமிவிலாசமும், பொறுமையும், அடக்கமும்பூஷணமாய்ப்பூண்ட பெண்கொடியைமாலையிட்டவன் யாரோ அவன் தான் புண்ணியபுருஷன் அவனைத்தான் இல்லறத்தானென்றும், குடும்பியென்றும் சமுசாரியென்றும், கிரகஸ்தனென்றும், பாக்கியவானென்றும்சொல்லுவார்கள். அந்த புருஷன் எந்தக்காரியத்தில் பிரவேசித்

தாலும் இலட்சுமிகடாட்சம் முன்னிற்கும் அவனுக்குப் பிறக்கும் பிள்ளைகளெல்லாம் அவயவங்கள் பழுதில்லாமலும், அறிவிற் குறைவில்லாமலும், கல்வியும், செல்வமும், ஞானமும், பூரண ஆயுளும் பூர்த்தியாய்ப் பெற்று பார்த்தீபனைப்போல் கீர்த்தியடைவார்கள், அப்பேர்க்கொற்ற பிள்ளைகளைப் பெறும் புண்ணியவான் அடையும் இல்லறமாட்சியும், பொன்னுலகக் காட்சியும் இன்னொருவன் பெறுவானென்பது அரிதே அரிது.

தெய்வ பக்திக்குப் பின்பு புருஷபக்தி விசேஷமென்பதும், ஸ்திரீகட்குச் சகல பாக்தவ்வியங்களிலும் புருஷபாக்தவ்வியம் அதி உத்கிருஷ்ட மென்பதும் சித்தமே. இதற்குத் திருஷ்டாந்திரமாகக் கலியாண மானவுடனே ஸ்திரீதன்னுடைய தாய் தந்தை சகோதரர் முதலியவர்களையும் பிதுரார்ஜிதங்களையும் விட்டு விட்டுப் புருஷனுக்கும் அவனுடைய திரவியங்களுக்கும் உரியவளாவதே போதுமான சாட்சியமா யிருக்கின்றது ஆகையால் பர்த்தாவிடத்தில் பரிபூரண நேசம் வைக்க வேண்டியது பத்தினியினுடைய மாறாதகடமையா யிருக்கின்றது. பர்த்தாவுக்குக் கீழ்ப்படிந்து அவனுடைய இஷ்டப்பிரகாரம் நடக்கிற பத்தினிக்குச் சர்வாபீஷ்டமும் நிர்விக்கினமாய்ச் சித்திக்குமென்பது சத்தியமே (இப்படி) ஒருநாளல்ல இரண்டுநாளல்ல அனேக வருஷகாலம் ஸ்திரீயும் புருஷனுங் கூடி வாழ்ந்து வம்சவிர்த்தியும் குடும்பப் பிரதிஷ்டையும் செய்யவேண்டியவர்களானதால் அவர்கள் தரித்திரர்களா யிருந்தாலும் அவர்கள் மனமொத்துக் கலந்து வாழ்வதே பெரிய பாக்கியம் அந்த பாக்கிய மில்லாவிட்டால் மற்றவகைப் பாக்கியமெல்லாம் அபாக்கியம் ஆகையால் உடலும் உயிரும் போலவும், நகமுஞ்சதையும் போலவும், மணியும் ஒளியும் போலவும், பூவும் வாசமும் போலவும், கரும்பும் இரசமும் போலவும் ஸ்திரீ புருஷர்கள் அந்நியோந் நியமாய்க்கூடி வாழக்கடவர்கள். அப்படி வாழ்ந்தால் இகபரசுகங்களை யடைவார்களென்பது நிச்சயமே.

சில சமயங்களில் நிஷ்காரணமாய் பெண்சாதியைப் புருஷன் கோபித்துக்கொண்டாலும் அதற்குப் பிரதியாகப் புருஷனைப் பெண்சாதி கோபிக்க எவ்வளவு மதிகாரமில்லை பெண்சாதி எப்போதும் வீட்டுக்கு ளிருப்பவளாதலாலும் அவளுக்குப் புருஷனைத் தவிற வேறே யஜமானன் இல்லாதபடியாலும் அவள் அந்த ஒரு யஜமானனுக்குத் திருப்தியாக நடப்பது எளிதா யிருக்கின்றது. புருஷன் எப்படிப் பட்ட அந்தஸ்துடையவனா யிருந்தாலும் அவன் பல யஜமான்களும் பலபேருடைய விரோதங்களும், பல கஷ்டமான தொழில்களும் உடையவனாகையால் தன்னை யறியாமல் அவனுக்குக் கோபம்வரக் காரணமிருக்கின்றது அந்தச்சமயமறிந்து பத்தினி ஒதுங்கவேண்டியதுகிரமம். பிரசண்டமாருதம் ஓங்கி வீசும்பொழுதும் அதிவேகமாய் ஜலப் பிரவாகம் வரும்பொழுதும் வளையாமல் எதிர்த்து நிற்கிற பெரிய விருட்சங்கள் வேரோடே சாய்ந்து வீழ்கின்றன. அந்தச்சமயத்தில் நிமிராமல் வளைந்துக்கொடுக்கிற சிறிய செடிகளுக்கு ஒரு அபாயமுமில்லை அப்படியே ஸ்திரீகளும் புருஷர்களுக்குக் கோபம் வரும்பொழுது எதிர்த்து உத்தரம் சொல்லாமல் சமயானுகுணமாக ஒதுங்குவதே விவேகம் ஸ்திரீகள் எவ்வளவு நன்மையாக நடந்தாலும் அதற்கனுசரணையாக நடவாமல் ஸ்திரீகளுக்குக் கொடுமைசெய்கிற சில புருஷர்களும் உண்டு இப்படிப்பட்ட நிர்ப்பாக்கியமான ஸ்திரீகளுக்குத் தெய்வம் சகாயஞ் செய்யவேண்டுமே யல்லாமல் வேறுசகாயமில்லை. கைவிரலே கண்ணைக்குத்தினால் கையை என்னசெய்யலாம் நம்முடைய பல்லே நம்முடைய நாவைக் கடித்தால் பல்லை யுடைக்கலாமா கப்பலேறினபின்பு கடல் யாத்திரைக்குப் பயந்து காரியமென்ன ஸ்திரீக்கும் புருஷனைத்தவிர வேறு கதி யில்லாதபடியால் தன்னாற் கூடியவரையில் புருஷனுக்குத் திருப்தியாக நடக்கவேண்டியது ஸ்திரீயினுடைய கடமையாயிருக்கின்றது, புருஷன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தெய்வபக்தியும் சாந்தமும்,

பொறுமையும்,உண்மையும்,அடக்கமும், வணக்கமும், கற்பு நெறியுமுள்ள ஸ்திரீகளுக்கு ஒருநாளுங்குறைவில்லை.

"தாயைப் பார்த்து பெண்ணைக் கொள்ளு
பாலைப் பார்த்து பசுவைக் கொள்ளு"

என்றபடி, ஒரு பெண் வேணுமென்றால் அவரவர் சக்திக்குத் தக்கபடி (குலத்தில் குரங்கைக் கோள்) என்பதற்கிணங்க குலகோத்திரங்களின் கொடிவழியை விசாரித்து தேடித்திரிந்து, ஊர் நாட்டை யறிந்து, வீடு வாசல் தெரிந்து, தாய்தகப்பனைக் கண்டு, காலாற உட்கார்ந்து, வாயாறப் பேசுவார்கள். எவ்வளவுதான் பேசினாலும் யாரை யாரறியக்கூடும். நீராழத்தைக் கண்டாலும் நெஞ்சாழத்தைக் காணலாமா துப்பாக்கியின் வயிற்றில் பீரங்கி பிறக்குமென்று யார்தான் நினைப்பார்கள். பெண்டு வாய்ப்பது புண்ணியவானுக் கென்பதுபோல்,

"புண்ணிய மிருந்து பெண்டு வாய்க்கவேணும்
பாக்கிய மிருந்து பசு வாய்க்கவேணும்."

அப்படி அமையாமல் பெண்ணொன்று பேரைச்சொல்லிப் பிடாரியென்று குறி சொல்லவந்தால் அதுவும் நம்அதிர்ஷ்டந்தானென்று அடக்கிக்கொண்டு மாமிநாத்தி முதலிய பெரியோர்களால் அன்றாடம் சீர்திருத்திக்கொண்டு (சர்க்கரைபந்தலில் தேன்மாரி பொழிவதுபோல்) ஆளைக்கசக்காமல் இன்பமான வார்த்தைகளால் அன்பு பாராட்டி ஆசையைக் காட்டி தன் மகளைப்போல் மருமகளையும் சீராட்டி துஷ்ட மருமகளானாலும் இஷ்ட மருமகளாய் அனுசரணைசெய்துக் கொண்டு அவள் என்னகுற்றஞ் செய்தாலும் புருஷனுக்கும் மூத்தாருக்கும் எட்டவொட்டாமல் தானே அடக்கித் தழுவிக்கொண்டு போகிறவர்கள்தான் மாமிமார்கள். அறஞ்சோராமை, புறங்கூறாமை, குற்றம் நழுகல், சுற்றந்தழுவல் முதலிய நற்குணமுடைய மாமிமார்களிடத்தில் எப்பேர்க்கொத்த துஷ்ட மருமகள் வந்தாலும் (மேருவைச் சார்ந்த

காகமும் பொன்னிறமாம் போல்) அதிசீக்கிரத்தில் நன்னடைத் தழுவிப் பொன்மகளென்னப் புகழப்படுவார்கள்.

> "மாமிக்கோர் மாமியுண்டு வாணருக்கோர் வாணருண்டு
> சாமிக்கு மேல்தகப்பன் சாமியுண்டு—பூமிக்குள்
> எல்லாந் தெரிந்தவருமில்லை தெரியாதவரு
> மல்லாமல் கண்டவர்களார்"

என்றபடி, அனேகம் கிழத்தலைகளும், பழத்தலைகளும், அல்லது நடுத்தலைகளும், மாமியார் என்கிற பட்டத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு நடுநிலைமையென்பது எள்ளளவுமில்லாமல் ஈவு யிரக்கமென்பதை காதவழியிலும் சேர்க்காமல் நாமும் ஒரு மாமியாருக்குக்கீழ் மருமகளாகத் தானேயிருந்தோம் நாம் மாத்திரமென்ன பிறக்கும்பொழுதே மாமியாராகப் பிறந்தோமாவென்று தான்பட்ட பாட்டையாவது தொட்டு நினைக்க நேரமில்லாமல்) கோட்டாயி விளக்கும் துட்டப்பத்திற்கு பட்டாமணியம் அமர்ந்ததுபோல்) வீணாய் விசிரி விளையாடிக்கொண்டு அயலார் பெற்ற பெண்களை குண்டுணி வேலைகளுக்கே ஆளாக்கிக் கொண்டு அடிமையிலும் அடிமையாய் நடத்திக்கொண்டு மிருகங்களைப்போல் மிரட்டிக்கொண்டும், ஆடு மாடுபோல் அதட்டிக்கொண்டும் குந்தினலும் குற்றம் எழுந்தாலுங் குற்றமாகப் பாவித்து எந்நேரமும் நாயே பேயே கழுதையே குரங்கே யென்று இம்மட்டில் விடாமல் புண்ணில் கோலையிட்டதுபோல் கண்ணீர் கலங்கும்படியாய் விஷவார்த்தைகளையே உபயோகித்துக் கொண்டிருப்பதன்னியில் தப்பித் தவறி புருஷனுடன் கிட்டே நெருங்கி நிற்கும்போதாவது பேசும்போதாவது பார்த்துவிட்டால் குடும்ப சங்கதியில் சாக்கு வைத்துக்கொண்டு அன்றைக்கெல்லாம் உதைப்பிரயோகமே தவிர இதப்பிரயோகங் கிடையாது, (இதுதானே)

குரங்கின் கையில் பூமாலை அகப்பட்டதுபோல சில குடும்பங்களில் மாமி மாருடைய உத்தர வில்லாமல் புருஷனுக்கும் பெண்சாதிக்கும் பேட்டியே கிடையாது. அவர்

கள் சந்தித்தாலும் கல்லுந் தேங்காயும் சந்திப்பதுபோலும், எலியும்பூனையும் சந்திப்பதுபோலுமே யல்லாமல் குளிர்ந்த தரிசனமில்லை.(சுவர்க்கத்திற்குப்போயும் சோற்றுப்பிச்சை யெடுப்பது போல)அனேகர் கலியாணஞ்செய்தும் நித்திய சந்நியாசிகளா யிருக்கிறார்கள் அத்திபூர்த்ததுபோல் தப்பித்தவறி புருஷர்கள் ஸ்திரீகளிடத்தில்ஒரு மதுரமானவார்த்தையைப் பேசிவிட்டாலோ மாமிக்குக் கடுப்பு மாமனுருக்கு மனஸ்தாபம் நாத்திக்கு வயற்றெரிச்சல் ஊரெல்லாம் ஒம்மல் மகன் செத்தாலுஞ்சாகட்டும் மருமகள் தாலியறுத்தால் போதுமென்று) நினைக்கிற நல்லகுணமுள்ள மாமிமார்களும் அநேகரிருக்கிறார்கள். புருஷன் பெண்சாதியைத் திட்டியடித்தால் மாமியாருக்கு இறந்துபோன தன்புருஷன் மறுபடியும் பிழைத்து வந்ததுபோல் உற்சாகம் உண்டாகும் (மாமியாருடைத்தால் மண்கலம் மருமகளுடைத்தால் வெண்கலம்) என்பதுபோல் மருமகள்மேலே மாமியார் தோஷஞ்சொல்லாத நேரமில்லை மாமிக்குக் கொடுமைசெய்கிற மருமக்கள்மாருஞ் சிலருண்டு இருந்தாலும் (மாமியார் உடைகுலைந்தால் வாயாலுஞ் சொல்லக்கூடாது) என்பதுபோல மாமியாருக்கு மாமியாரே யீடு தவிர மற்ற எந்தச் சாமியாரையும் யீடுசொல்லக்கூடாது. மேலும் அன்பற்ற மாமியாருக்கு கும்பிட்டாலுங் கோபம் ஆகையால் மாமியாரைப்பற்றி நெடுந்தூரம் பேசவேண்டிய அவசியம் இவ்விடத்தி லில்லை.

"மடிப்பூனையைக் கட்டிக்கொண்டு
வழிப்பூனைக்கு சகுனம் பார்ப்பதுபோல்."

குடும்ப சனியனென்கிற அடங்காப்பிடாரியைப் பெண்டாகக்கொண்டு ஆடல்படுகிற ஆடவர்களுக்கு (கினவிலே தேன் குடித்ததுபோல) நினைவிலே தித்திப்பைக்காட்டி சனியனென்கிற துக்கத்துடரைத் துடைப்பதற்காக இந்நூல் யெழுதப்பட்டது (ஆனால்) இந்நூலைப் படிப்பதினாலேயே கொல்லைக்காட்டு நரிபோல் பல்லைக் காட்டுகிற எல்லாப் பெ

ண்களும் நல்லவர்களாவார்களென்பது எண்ணமல்ல தங்கத்தை ஆதியாகவைத்து பித்தளைவரையிலும் இடையிலுள்ள சென்னிறலோகங்களைப் பார்க்குமிடத்து ஒன்றுக்கொன்று தன்னினம்போல் காட்டினாலும் பத்தரைமாற்று, பத்துமாற்று, எட்டரைமாற்று, எட்டுமாற்று, ஏழுமாற்று, ஆறுமாற்று, செம்பு, பித்தளை யென்கிற நிரபேதத்தால் வேறுபட்டு இடபேதத்தால் பேருபெற்று சொல்லுகிறதல்லவா (கற்பூரம்போலக் கடலுப்பிருந்தாலுங் கற்பூரமாமா கடலுப்பு) என்றபடி பெண்களெல்லாம் ரூபத்தில் ஒன்றாயிருந்தாலும் குலத்தாலும், நடையினாலும், குடையினாலும், பொருமையினாலும், திறமையினாலும், சத்தியத்தினாலும், புருஷர்களிடத்து பக்தியினாலும், பூமிதேவியென்கிற பேரைப்பெற்று கலியாணவீட்டுப் பூமாலையைப்போல் யாவராலும் புகழப்பெற்று சமுத்திரம்போல் பெரியகுடும்பமாய்ப் பெருகி வாழ்வார்கள்.

முற்காலத்தில் கற்புடையவர்களில் சந்திரமதி காட்டுத்தீயைக் குளிரச்செய்தாள். தமயந்தி தன்னையிச்சித்த வனவேடனை எரித்தாள். அநசூயை தன் சற்பைச் சோதிக்க வந்த திரிமூர்த்திகளைக் குழந்தைகளாக்கி ஸ்தன்யபானம் பண்ணுவித்தாள். சாவித்திரி தன்நாயகன் உயிரை யமன் கொண்டுபோகிற தருணத்தில் அவனுடனே வாதாடி மீட்டாள். நளாயனி ஆணிமாண்டவியர் சாபத்தால் தனக்கு வைதவியம் வராது பொழுது விடியாதிருக்கப் பிரதிசாபமிட்டாள். தேவர்கள் வேண்டிக் கொண்டதினால் மறுபடியும் பொழுதுவிடிய அனுக்கிரகித்தாள். திருவள்ளுவநாயனார் மனைவி கணவனது பணிவிடையி லிருக்கையில் ஒரு தபசிவந்து பிச்சைகேட்க பிச்சையிடக் காலதாமதப்பட்டமையால் அவள் அந்நினைவை யறிந்து "கொக்கென்று நினைத்தையோ கொங்கணவா" என்றாள். இப்படியெல்லா மிருப்பதனாலல்லவோ கற்புடையவர்களின் மகிமை தேவர்கள் முனிவர்களாலு மளவிடற்கரிதென்று சொல்லப்படுகிறது.

(தற்காலத்திலும்) அப்படிப்பட்ட கற்புடையபெண்மணிகள் உலகம் நிரம்ப இல்லாவிட்டால் இந்த மழையும்பெய்யுமா இக்காலத்தில் கற்புடையவர்க ளில்லையென்று சொல்வதற்கு யாருக்காவது பல்லைத்தாண்டி நாக்கு துணியுமா.

சிறுபிராயத்தில் தாய் தகப்பன்மார்கள் அடக்கி நன்மார்க்கத்தில் கொண்டுவந்ததினால் நற்குணங்களிற் சிறந்த ஒரு ஐரோப்பிய ஸ்திரீயினுடைய குணாதிசயங்களை விவரிப்போம் அவள் புண்ணியத்திற்கு பொக்கிஷம், பொறுமைக்கிருப்பிடம், ஞானக்களஞ்சியம், நற்குணப்பாத்திரம், கற்பலங்காரி, கனவுபகாரி, அற்புதசுந்தரி, அறிவிலே மந்திரி, விற்பனவிதரணி, வினயசம் பூரணி, அவள் வாடாத புஷ்பம், மங்காததீபம், ஆடாதமாமயில், அலையாத மாங்குயில், ஓடாத புள்ளிமான், ஊராதபைங்கிளி, மாற்றிலாத்தங்கம், மாசிலாமாணிக்கம், கோதிலாக் கரும்பு, குறையிலாச் சந்திரன், அவளைப்பார்த்தாலும் பசிதீரும் கண்டாலும் கலிநீங்கும் அவள் பிராணன் போனாலும் ஒரு பொய் சொல்லத் துணியாள் பாபமென்றால் பாம்பைக் கண்டதுபோல் நடுங்குவாள் அவள் எந்தவேலைசெய்தாலுங் கடவுளுடைய தியானத்தை மறவாள் அவள் எந்த உயிரையும் சொந்தவுயிர் போல் எண்ணி உபகாரஞ் செய்வாள் கணவனுக்கு அற்பவருத்தமுமில்லாமல் குடும்பபாரங்களையெல்லாம் தானே தாங்கிக்கொள்வாள் குடும்பத்திற்கு வேண்டிய பண்டபதார்த்தங்களை யெல்லாம் தக்ககாலத்தில் சேகரித்து வைத்துக்கொள்வாள் வருமானத்திற்கு மிஞ்சினசிலவுசெய்யாள் தன் அந்தஸ்துக்குத் தகுந்த காரியங்களில் யாதொரு குறைவும் செய்யாள் தன் வீட்டுக் காரியங்களை வெளியிலே பேசாள் பிறர்மேல் நிந்தையான வார்த்தைகளைத் தானும் பேசாள் பிறர் பேசவுமிடங் கொடாள்.

கணவனே அவளுக்குக் கதி கணவனே அவளுக்குநிதி பர்த்தாவுடன் கூடிவாழ்வதே அவளுக்குப் பரமானந்தம்

பர்த்தா இருக்குமிடம் காடாயிருந்தாலும் அது அவளுக்கு ராஜதானிக்குசமானம் பட்டணமாயிருந்தாலும் பர்த்தா யில்லாத யிடமேபாழ் கணவனுடைய பட்சமே அவளுக்கு லட்சாந்திரம் அவளுக்கு என்ன துன்பம் வந்தாலும் கணவனுடைய கிருபாலோக்கம் பட்டால் அவளுடைய கஷ்டமெல்லாம் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும் அவளுக்கு எவ்வளவு பாக்கியமிருந்தாலும் கணவனுடைய கிருபைமட்டும் நீங்கினால் (ஜலத்தைவிட்டுநீங்கிய தாமரைப்போலவும் நிலத்தைவிட்டு நீங்கிய பயிர்போலவும்) வாடுவாள் கணவனுடைய மனமும் அவளுடைய மனமும் ஒன்றாயிருப்பதால் கணவனுக்கு எதில் விருப்பமோ அதிலே அவளுக்கும் விருப்பம் கணவனுக்கு எதில் வெறுப்போ அதிலே அவளுக்கும் வெறுப்பு கணவன் புசித்தால் அவளுக்குப்பசிதீரும் கணவன் சந்தோஷித்தால் அவளுக்கும் சந்தோஷமுண்டாகும் கணவனுடைய துக்கமே அவளுக்கும் துக்கம் புருஷனுக்கு ஆபத்துவருங் காலத்தில் அவளே யடைக்கலம் புருஷன் துக்கப்படுத்துங்காலத்தில் அவளே பரமசஞ்சீவி தரித்திர காலத்தில் அவளே சௌபாக்கியம்.

கணவன் அழகில் (ஆயிரம் அமாவாசைக்குச்) சமானமானவனாயிருந்தாலும் அவனை அதிரூபசௌந்தரியமுள்ளவனாகப் பாவிப்பாள்அவன் தரித்திரனாயிருந்தாலும்குபேர சம்பத்துடையவனாக எண்ணுவாள் தான் துரைமகளாயிருந்தாலும் புருஷனுக்குத் தன்னை ஊழியக்காரியாக நினைப்பாள் (கல்லானாலும் கணவனை புல்லானாலும் புருஷன் மரமானாலும் மணவாளன்) ஆகலால் புருஷனுக்கு எப்போதும் ராஜோபசாரஞ் செய்வாள் புருஷன் ஒன்றுந்தெரியாத ஜடனாயிருந்தாலும்அவனுடைய வாக்கை வேதவாக்கியம்போல யெண்ணுவாள் ஒரு விஷயத்திலும் கணவனுக்குக் கோபம் வரும்படி நடவாள் கணவன் நிர் நிமித்தியமாய்க்கோபித்தாலும் பொறுமையுடனே சகித்துக்கொண்டு சமயம்

பார்த்து அமிர்த வருஷம்போல இன்பமான வார்த்தைகளைப்பேசி கணவனது கோபத்தைத் தணிப்பாள்.

அந்தக் குணவதியை வேறொரு ஸ்திரீநோக்கி உன்னுடைய தகப்பனே தேசமாளுகிற அரசன் உன்னுடைய தாயோ அரசி இப்படிப்பட்ட தந்தை தாய்களையும் சகோதரர்களையும் அரண்மனையையும்விட்டு நீங்கி ஒரு ஏழையைவிவாகஞ்செய்துக்கொண்டு அவனுடைய சிறுமனையில் வசிக்கும்படி உனக்கு லபித்ததேயென்று அநுதாபப்பட்டாளதைக் கேட்ட அந்தப் புண்ணியவதி என்னுடைய கணவர் வீடு சிறுவீடானதால் நான் எப்போதும் அவருக்குச் சமீபத்திலிருக்கும்படியான பாக்கியம்பெற்றேன் அவர் ஏழையானதால் அவருடைய ஊழியங்கள் யாவும் என்னுடைய கையால் செய்யும்படியான அதிர்ஷ்டமும் எனக்குக் கிடைத்தது விஸ்தாரமான பல அரண்மனைகளும் பல ஊழியக்காரர்களுமுள்ள என்னுடைய தாய் தந்தையருக்கு இப்படிப்பட்ட பாக்கிய மில்லாமையால் அவர்களுடைய செல்வம் பறந்தது பின்னும் என்னுடைய புருஷரே எனக்கு அரசர் அவருடைய சிறு வீடே எனக்கு அரண்மனை அந்த அரசருக்கு நானே குடி அவருடைய அன்பே எனக்குச்செல்வம் என்னுடைய கற்பே அவருக்கு நான் கொடுக்குங் கடமை என்னுடையதிரேகமே அவருடைய உடைமையென்று திடமாகச் சொல்லுந்தன்மை யாருக்குத்தான் கிடைக்கும்.

(இதுவுமன்றி,)

தெய்வபக்தி யுள்ளவர்கள் தெய்வத்திற் குரிய ஆலயம், பூஜாபீடம் முதலியவைகளிடத்திலும் சிரத்தை யுள்ளவர்களாயிருப்பதுபோல் புருஷபக்தியுள்ள அந்தச் சீமாட்டி தன்கணவனைப் பெற்ற தாய் தந்தைகளைத் தன்னுடைய தாய் தந்தைகளினும் அதிகமாயெண்ணி அவர்களுக்குப்பாதம்பணிந்து பணிவிடை செய்வாள் வார்த்திக திசையில் சரீரமெலி

விஞல் கோபம் வருவது சிலருக்குச் சகஜமானதால் தன்னுடைய மாமன் மாமி முதலானவர்கள் அகாரணமாய்த் தன்னைக் கோபித்தாலும் அதைப் பாராட்டாமல் மதுரமாய்ப் பேசி அவர்களுடைய கோபத்தைச் சாந்தப்படுத்துவாள். அவர்கள் எங்கள் மருமகள் போலுண்டா இவளே எங்கள் கண்மணி, இவளே பெண்மணி, இவளே எங்களைப் பெற்றவள், இவளே எங்களை வளர்க்கிறவள், இவளே எங்களைக் கரையேற்றுகிறவள், இவள் தேடக்கிடையாத் திரவியம், காணக்கிடையாக் கற்பகம் என்றுமகிழும்படிஉபசரிப்பாள். கொழுந்தன் மார் நாத்தினர் முதலியவர்களைத் தன்னுடையசகோதரர்களிலும் அதிசமா யெண்ணி அவர்களுடைய காலிற்பட்டது தன் கண்ணிற்பட்டதாக நினைத்துப் பூர்ண பட்சங் காட்டுவாள். அவளும் அவளுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் நடக்கிற ஒழுங்கையும் மரியாதையும் அவளுக்குள்ளிருக்கும் நித்திய சமாதானத்தையும் மாறுதபட்சத்தையும் அதனு லுண்டாகிற ஆனந்தத்தையும் யோசிக்குமிடத்தில் அவளுடைய வீட்டை பூலோகமோட்சமென்று சொல்லத் தடையில்லை.

ஆலத்திற் கெல்லாம்
மூலவரே பிரதானம்.

என்பதுபோல இப்புத்தகத்தின் தலைப்பெயரையே தன் பெயராய்ப் பூண்டுவந்த குடும்பசனியனென்னும் சண்டாளி, குலத்துரோகி, இனத்துரோகி, புருஷத்துரோகி யென்று பலபேருந் தூஷிக்க பாபமென்கிற சதையும் சாபமென்கிற இரத்தமுஞ் சேர்ந்து ஒரே ஜடலமாக யெடுத்த அகடவிகட கொடிய பாவியின் முடியா நடவடிக்கையைப் படிப்படியாய்ச் சொல்லி பலநேரங் கழிப்பதைவிட (அடுக்காய்ச் சொல்வதே படிப்போர்க் கழகு) என்பதுபோலகஷ்டத்திற்கெல்லாந் தாய்வீடான துஷ்டப் பெண்டாட்டியின் குணத்தைக் கேளுங்கள் (குடும்பசனியன்)என்றால் பாபங்களுக்கெல்லாம் அவள் பண்டகசாலை, நன்மையெல்லாம் அவ

ளுக்கு நஞ்சு, தீமையெல்லாம் அவளுக்கு தேவாமிர்தம், வம்பு வார்த்தைகளெல்லாம் அவளுக்குவாய்ப்பாடம், பொய்வார்த்தைக்கெல்லாம் அவளே பூரணச்சந்திரன், உண்மை பேசுவதில் அவள்தான் ஊமைப்பிறப்பு, புண்ணியமென்றால் போராட்டம், குற்றமென்றால் கொண்டாட்டம், சுயகுற்றம் நினைப்பதில் சுத்தகுருடி அன்னியர் குற்றத்திற்கு ஆயிரங்கண்ணுடையாள், ஏழைகளென்றால் அவளுக்கு ஏழாம் பொருத்தம், உண்டானபேருக்குத் தொண்டாகவே திரிவாள், பிட்சைகேட்போரை சிட்சைசெய்வாள், எச்சிற்கையாலுங் காகமோட்டாள், அவளுக்கு முன்னே யாராவது ஈயைப்பார்த்து (ஈ) என்றாலும் சண்டைக்குவருவாள், நாயைப்பார்த்து (நாய்) என்றாலும் சண்டைக்கு வருவாள் பூனையைப்பார்த்து (பூ) என்றாலும் சண்டைக்கு வருவாள், அவளுக்கு கோயிலில்லை, குளமில்லை, தெய்வமில்லை தேவாதியில்லை அவளுக்கு அன்னமிட்டோரையே கன்னமிடுவாள் அளவு செய்தோரையே களவு செய்வாள், அவளுக்கு பணமே தெய்வம், பணமே குரு, பணமே ஜீவனம், பணமே பாவனம், கண்ணாடியில் தன் முகந் தெரிவதுபோல் அவள் யாரைப் பார்த்தாலும் தன் மயமாகத் தோன்றுவதால்தன் குற்றத்தைப் பிறர்மேலேற்றி அவதூது பேசுவதே அவளுடைய சுபாவகுணம், அவள் திருடியானதால் எல்லாரையுந் திருடரென்று சொல்லுவாள், அவள் பொய் பேசுகிறவளானதால் எல்லோரையும்பொய்யரென்று நினைப்பாள், அவள் வஞ்சகியானதால் எல்லாரையும் வஞ்சகரென்று தூஷிப்பாள், அவளுடைய வாய்க்குப் பூட்டு போட்டாலும் தூஷணைபேசாமலிருக்காள், அவள் காதுகளைத் தைத்துவைத்தாலும் கோள்வார்த்தைகளைக் கேளாமலிருக்காள் அவள் கைகளைக் கட்டி வைத்தாலுந் திருடாமலிருக்காள், அவள் கால்களில் விலங்கிட்டு வைத்தாலும் அண்டை வீடுகளிற் போய் சண்டை செய்யாமலிருக்கமாட்டாள், அவளுக்கும் அவள் புருஷனுக்கும் ஜென்மப்பகை, தன் புருஷன் ஒன்று

சொன்னால் அவள் ஒன்பது சொல்வாள், அவன் வேண்டு மென்பதை இவள் வேண்டாமென்பாள், அவன் தெற்கென் றால் இவள் வடக்கென்பாள், அவன் கறுப்பென்பதை இவ ள்வெளுப்பென்பாள், புருஷனுக்கு எது இஷ்டமோ அது அவளுக்கு அநிஷ்டம், புருஷனுக்கு யார் மித்திரர்களோ அவர்களெல்லாரும்அவளுக்குச் சத்துருக்கள்,புருஷனுக்கு யார் பகைவர்களோ அவர்களெல்லாரும் அவளுக் கிஷ்டர் கள், புருஷனை அவளுக்கு விஷமா யிருக்கும்போது புரு ஷனுடைய பந்துக்களை அவள் எப்படி மதிப்பாள். மாமி சுமங்கலியா யிருப்பதைத் தான் அமங்கலியாயிருப்பதுபோ லெண்ணுவாள், மாமிக்குத் தலைவலித்தால் இவளுக்குத் தலையில் கிரீடந்தரித்தது போலும், நாத்தினருக்குப்பிள்ளை பிறந்தால் இவளுக்கு ஒருபிள்ளை யிறந்ததுபோலும்,ஓரகத் திக்கு ஒரு சுகம் உண்டானால் இவளுக்குத் துக்கம் சம்ப வித்ததுபோலும், அவள் கழுத்தில் தாலியிருப்பது இவள் கழுத்தில் தாலி யில்லாததுபோலும், அவளுக்கும் அவளு டைய பிள்ளைகளுக்கும் ஓயாத பெரும்பகை, பிள்ளைகளை அவளும் நேசிக்கிறதில்லை, அவளை பிள்ளைகளும் நேசிக்கிற தில்லை. பிள்ளைகள் யிஷ்டப்படி அவளும் நடவாள், அவ ளிஷ்டப்படி பிள்ளைகளும் நடவார்கள், (கலியாண வீட்டில் கட்டிக் கொண்டழுகிறவள் இழவுவீட்டில் என்ன செய்யமா ட்டாள்) தன் புருஷனையும் பிள்ளைகளையுமே பகைக்கிறவள் அன்னியர்களைப் பகைக்காமலிருப்பாளா அவளுக்கு ஊரெ ல்லாம் பகை, ஊரெல்லாம் அபக்கியாதி, எல்லாரும் அவளு டைய கேட்டை விரும்புகிறவர்களே தவிர அவளுடைய க்ஷேமத்தைப் பிரார்த்திக்கிறவர்கள் ஒருவருமில்லை. அவ ளுடைய மன அசுத்தம் எப்படியோ அப்படியே சரீர அசு த்தமும் உள்ளவளா யிருக்கிறாள் அவளுடைய தேகத்தில் எக்காலத்திலாயினும் ஜலம் பட்டிருக்குமோ என்னமோ அறியோம் அவள் தேகத்தினழுக்கைத்திரட்டினால் பலவண் டிப்பாரம் ஏற்றலாம் அவளுடைய துணி நெருப்பிற்போட் டாலும் வேகாது அவள் சிரசுத்தில் புஷ்பம்பட்டால் தேக

நாற்றத்தை புஷ்பம் வாங்கிக்கொள்வதே யல்லாது புஷ்ப வாசனை தேகத்தில் சாருகிறதில்லை அவளுடைய தேகம் போலவே அவளுடைய வீடும் அசுத்தங்களுக்கு ஆலயமா யிருக்கின்றது அசுத்தத்தில் ஜனிக்கிற பல பூச்சிகளும் புழுக்களும் அவளுடைய வீட்டில் புத்திர பௌத்திர களத்திராதிகளுடன் க்ஷேமமாய் வாழ்ந்துக்கொண்டிருக்கும் அவளுடைய வீட்டின் அசுத்தங்களையும் அவளுடைய துர்மார்க்கத்தால் அவளுக்கு வருகிற பல துன்பங்களையும் அவளுக்கும் அவளுடைய குடும்பத்தாருக்கும் நடக்கிற ஓயாத சண்டைகளையும், கலகங்களையும் வியாஜியங்களையும், விரோதங்களையும் பார்க்குமிடத்தில் அவளுடையவீட்டை பூலோக நரகமென்று சத்தியமாகச் சொல்லலாம்.

இப்பேர்க்கொத்த சண்டாளியை, சாமண்டியை, குலத்துரோகியை, ஜனத்துரோகியை, பந்துத்துரோகியை, பிதுர்த்துரோகியை, குருத்துரோகியை, தெய்வத்துரோகியை, புருஷத்துரோகியை, பிறவித்துரோகியை, களத்திரத்துரோகியை, சினேகிதத் துரோகியை, தர்மத்துரோகியை, (குலத்தைக்கெடுக்கவந்த கோடாலிக்காம்பு, எமனாகவே வந்தவள் நமன் தூதுவள்) இவள்தானென்று எவ்வளவுமெண்ணாமல் பெண்டாட்டியென்று நம்பி நம்பி கொண்டாட்டமாயிருக்கும் சண்டாளன் தலைவிதியும் அவனுடையுங்கதியும் என்ன கதியோ யாரறிவார்கள் கதிக்கெல்லாம் பதியான அதோகதியே தவிர வேறுகெதி யடையானென்பது சுடுகினும் தூருவது பங்கும் தேறுமென்று சீராகச்சொல்லலாம்,

(இதற்காகவே,)

பத்தாவுக் கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலுங் கூடி யிருக்கலாம்—சற்றே
ஏறுமாறாக யிருப்பாளே யாமாகில்
கூறாமற் சன்யாசங் கொள்.

என்று முன்னோர்களெல்லாம் ஜீவகாருண்ணியத்தை முன்னிட்டே பல யிடங்களிலும் தேங்காயுடைத்ததுபோல்

சொல்லி யிருக்கின்றார்கள் (பழம்புண்ணுளி பரிகாரி) என்பதுபோல பட்டுக்கெட்டு பரிதேசியான இல்லறத்தாரும் கல்லுங்கரையச் சொல்லியிருக்கிறார்கள் இதுவுமன்றி பெண்ணென்ற பேயை விலக்க முடியாமல் அனேக குடும்பங்களலேந்துக் கெட்டு அம்பலமானதையும் பார்த்திருக்கிறோம் இதற்குத் திருஷ்டாந்திரமாகச்சில சிறுகதைகளும் உண்டு.

சோழநாட்டில் ஓர் வேளாளன் ஒருநாள் தன் பெண்சாதியுடனே இன்றைக்கு பெரியவர் ஒருவருக்கு அமுதுபடைக்க வேண்டுமென்றுசொல்ல அவள் இது நல்ல வேடிக்கைதான் (தன்னைப்பெற்ற ஆத்தாள் கிண்ணிபிச்சை யெடுக்கிறாள் தம்பி கும்பகோணத்திலே கோதானம் பண்ணுகிறான்) என்பதுபோல வீட்டிருப்பு அறியாத ஆண்பிள்ளையைக்குறித்து என்னசொல்லுகிறது "அஞ்சுமூன்றும் அடுக்காயிருந்தாலல்லவோ அறியாத பெண்ணுங் கறியாக்குவாள், அமுதுபடைக்கிறதற்கு அரிசிவேண்டாமா பதார்த்தம்வேண்டாமா வெறுங்கையைக்கொண்டு முழம் போடுவது எப்படி யென்றுசொல்ல அவள் சொற்படி சகலமுஞ் சேகரித்துக்கொடுக்க வேண்டுமென்றால் வெண்ணெய் மொத்தைபோல் நூற்கலாகாதா அவளுக்குச் சம்மதியில்லாமையால் பின்னுமவள் "அரிசி ஆழாக்கானாலும் அடுப்பங்கட்டி மூன்றுவேண்டுமல்லவோ, பானைசட்டி முதலிய ஏனமில்லாமல் எவ்விதத்தில் சமையலாகிவிடுமென்ன அவைகளையுந் தருவித்து சீக்கிரத்திற் சமையென்றான் அவள் நீபோ உனக்கென்ன எனக்குத் தள்ளாது என்னாலே முடியாது தலைநோகிறதென்று போக்குச்சொல்ல அவன் அடி செக்குலக்கைபோலிருக்கிற உனக்குவந்த கேடு என்னவென்று கேட்க அவள் "எருதுநோய் காக்கைக்குத் தெரியுமா, (தலைநோயுங் காய்ச்சலும் தனக்கு வந்தாலல்லவோ தெரியும்) என்று பாயை விரித்து நெடுமுக்காடிட்டுப் படுத்துக்கொள்ள அவன் இவளென்ன சண்டியா யிருக்கிறாளென்று கோபத்தினால் மெல்லென ஓரடி யடிக்க ஆ! ஆ! அடசண்டாளா என்னை அடித்துக்

கொல்லவா ஏற்பட்டாய் (உரலிலே தலையை நுழைத்துக் கொண்டு உலக்கைக்குப் பயப்பட்டதினாலே விடுமோ சும்மா சொல்லு இனி நான் உயிரோடிருக்கிறதில்லை ஊமத்தங் காயைத் தின்று பழிபோடுகிறேனென்று தெருவிலே வந்து பெருங்கூச்சலிட்டுப் புருஷனைத் தூற்றினாள் இப்படிப்பட்ட வளைக் குறித்து “தானே தூற்றும் பெண்டீர் கூற்றெனத் தகும்) என்று சொல்லுகிறது இந்தச்சரித்திரம் மணவாள நாராயண சதகத்தில் “ஐயருக்கு அமுது படை” என்னும் பாடலிலுஞ் சொல்லியிருக்கின்றது.

தென்னாட்டில் சாதுவான ஒருவனுக்கு வாய்ப்பட்டியாகிய ஒரு படுநீலிவந்து பெண்டு வாய்த்தமையால் அவன் அவளுடைய மூர்க்கத்துக்கு அஞ்சி சுவேச்சையாய் ஒன்றுஞ் செய்யக்கூடாமல் அவள் இட்டது சட்டமாக வருத்தத்தோடு காலங்கழித்து வருகையில் ஒருநாள் அவனுக்கு கிரகச்சாரம் போதாமல் ஔவையென்பவள் அவனிடத்திற்குவந்து உணவுகேட்க நல்லதென்றுசொல்லி, (பெண்ணின் குணமறிவேன் சம்பந்தி வாயறிவேன்) என்பதற்கு யேற்க தன் பெண்சாதியின் குணத்தைத் தான் அறிந்தவனாகை யால் ஔவையை வீட்டிற்குள் அழைத்துப் போகாமல் தெருத்திண்ணையில் தானே யிருக்கவைத்துத் தான்மாத்திரம் உள்ளே நுழைத்து பெண்சாதி இதமுண்டாக யிச்சக வார்த்தைகள் பேசிதான் ஒரு பெண்போல அவளுக்குப் பேன் பார்த்து ஈர் உருவி சமயம் நோக்கி மெள்ள அந்தச் செய்தியை யவள்காதிலே போகவிட (ஏணவாயனைக் கண்டாளாம் யேணிப்பந்தம் பிடித்தாளாம்) என்றதுபோல அவன் தன் புருஷன் மேதக்குணத்தைப்பார்த்து பூதம்போல ஆர்ப்பரித்து உன் பவிசுக்கு விருந்து ஒருகேடா, உனக்குத்தொலைக்கிறதுமல்லாமல் ஊருக்குந் தொலைக்கவாயென்று வாயில் வந்தபடி பேய்பாட்டாகப் பேசி யேசிக் கழுநீர்ப்பானையையே நதிவந்து அவனது தலையில் அபிஷேகஞ்செய்து திருவலகு

கொண்டு வெண்சாமரைவீசி சுளகெடுத்து ஆலவட்டம் பரிமாறி பரிவேட்டை விடுவதுபோலத் தெரு முழுதும் அவனைத்துரத்தி அடித்தாள் அதுகண்டு ஔவை இந்தச்சரித்திரத்தை அவ்வாறுநடக்கும் பெண்களுக்கு புத்திவரும்படி,

" இருந்தங் கிதம்பேசி யிருரிகிப் பேன்பார்த்து
விருந்துவந்த தென்று விளம்பத்—திருந்தடியாள்
பாடினுள் பேய்பாட்டைப் பாரச் சுளகெடுத்துச்
சாடினுளோடோடத் தான்.

என ஒரு பாடலாகப் பாடிப்போனுள் இவளும்பெண் பிறப்பிலே சம்பந்தப்பட்டவளா யிருந்தாலுங் கற்புடையவர்கள் இத்தன்மையாகிய துஷ்டைகள் முகத்தையும்பார்ப்பார்களா! இவர்களுடனும் பேசுவார்களா! நேசிப்பார்களா! என்பது கருத்து.

எண்சாணுடம்பிற்குச் சிரசே பிரதானமா யிருப்பதுபோல் ஸ்திரீகளுக்குச் சகல குணங்களிலும் கற்புநிலையே முக்கிய காரணமா யிருக்கின்றது கற்புநிலை தவருதவளுக்கு முக அழகுஇல்லாமலிருந்தாலும் கலியாணவீட்டுப்பூமாலைபோல் அவள் யாவராலுங் கனப்படுத்தப்படுவாள். கற்புநிலை கெட்டவள் அதி சுந்தரியாயிருந்தாலும் அவள் சுடுகாட்டு மாலையைப்போல் யாவராலும் இகழப்படுவாள். உலகத்தில் ஒருவனுக்குத் தீங்கு செய்கிறவன் அவனுக்குமட்டுந் துரோகியாகிறுன் அன்னியபுருஷனைச் சேருகிற ஸ்திரீயோ வென்ருல் பலபேர்களுக்குத் துரோகஞ்செய்கிருள் அவள் தன்னையுங் கெடுத்து அந்த அன்னியபுருஷனையுங் கெடுத்துதன்னுடைய சொந்தப் புருஷனுக்குந் துரோகியாகி அந்த அன்னிய புருஷனுடைய பத்தினிக்கும் பெரியதுரோகியாகிருள் அவளுடைய துர்மார்க்கத்தால் அவளுடைய புருஷனுக்கும் அன்னிய புருஷனுடைய பத்தினிக்கும் உண்டாகிற சந்

சலமும், பொறுமையும், கஸ்தியும், துக்கமும் அபரிமிதமல்லவா? அன்றியுங்கோடாலிக்காம்பு குலத்துக்கீனமென்பது போல கற்பு நிலைகெட்டவள் தன்னுடைய உற்றார் பெற்றார் முதலியவர்களுக்கும் தன்னுடைய புருஷன் வழி சுற்றத்தாருக்கும் மாறாத அவமானத்தையும், இழிவையும், நிந்தையையும் உண்டுபண்ணுகிறாள் இந்த அனியாயமானஉலகமானது அவள் செய்த குற்றத்திற்காக அவளுடைய புருஷனையும் பிள்ளைகளையும் அவமானப்படுத்தி நிரபராதிகளான அவர்களையும் தண்டிக்கின்றது மற்ற குற்றங்களெல்லாம் சிலகாலத்தில் மறைந்துப்போகும் விபசாரதோஷமோ வென்றால் உலகமுள்ளமட்டும் மறையாது அந்தவியபசாரி இறந்தாலும் அவளுடைய அபகீர்த்தி இறவாமல் என்றுஞ் சிரஞ்சீவிப்பட்டம் பெற்றுக்கொண்டிருக்கும் மற்ற குற்றங்களெல்லாம் ஒவ்வொருபிராயச்சித்தமுண்டு ஒருவனுடைய பொருளைத் திருடினால் அதற்குச்சரியான பொருளைக் கொடுத்து திருப்திசெய்யலாம் அப்படியே நமக்குண்டாகிற கஷ்டங்களுக்கும் நாம் பிறருக்குச்செய்கிற தீங்குகளுக்குத் தகுந்த பரிகாரங்களைச் செய்யலாம் பதிவிரதா பங்கத்திற்கு ஒரு பிராயச்சித்தமு மில்லையே கெட்டுப்போன கற்புஎட்டு நாளழுதாலும் வருமா, அரைக்காசுக்கழிந்த கற்பு ஆயிரம் பொன்கொடுத்தாலும் வருமா, என்று பழமொழியுமிருக்கின்றதே ஸ்திரீகளுக்குக் காவலாகிய நாணத்தையும் மானத்தையும் விட்டு ஒரு ஸ்திரீ பரபுருஷ சம்போகத்துக்கு எப்போது உடன்பட்டாளோ அப்போதே அவள் எப்படிப்பட்ட அக்கிரமங்களுக்கும் பின்வாங்கமாட்டாள் பதிவிரத்தியாலோபம் பலபாபங்களை விளைவிக்கிற வித்தாயிருக்கின்றது எப்படியெனில் பர புருஷனைச்சேருகிற ஸ்திரீ அந்தக் குற்றத்தை மறைப்பதற்காகப் பல தந்திரங்களையும், பொய்களையும், கபடமார்க்கங்களையும் உபயோகிப்பாள் அன்னிய புருஷனால் உண்டாகிற கர்பத்தை யழிப்பதற்காக அவள் பல மருந்துகளையுண்டு கொலை பாதகத்தையுங் கட்டிக்

கொள்வாள் அவள் சில சமயங்களில் தன் புருஷனைக்கொல்லவும் வழிதேடுவாள் காமவிகாரத்தைத் தூண்டுவதற்காக மது முதலிய லாகிரி வஸ்துக்களையும் அருந்துவாள் அந்த வஸ்துக்களையும் விலைக்கு வாங்கவும் பரபுருஷர்கள்பார்க்கத் தன்னை யலங்கரித்துக்கொள்ளவும் கையிற் பொருளில்லாவிட்டால் திருடவும்ஆரம்பிப்பாள் ஒரு பரபுருஷன்போலப் பல புருஷர்களைச் சேர்ந்து பொருள் சம்பாதிக்கவும் துணிவாள் கருடன்காலிற் கெச்சை கட்டினதுபோல் வியபசார தோஷம் எப்படியும் பகிரங்கமாய் விடும் அந்தக் குற்றத்தை மறைக்க யத்தனிப்பது ஆகாயத்தைப் படல்கொண்டு மூடுவதற்கும் பூனை தன் கண்ணைமூடிக்கொண்டு பாலைக்குடிப்பதற்கும் சமானமா யிருக்கின்றது இப்போக்கொத்த தண்டு மாரிகளைப் பெண்டாகக்கொண்டு திண்டாட்டப் பட்டவர்களில் அனேகம்பேர் ஆண்டி வேஷமானார்கள்.

குடும்பசனிய னென்கிற இடும்புக் காரிகளின் அடாஅடத்தைப்பற்றி எவ்வளவு யெழுதினாலும் காயிதமுங் குறையாது கையும் நடுக்காது படிக்கவுஞ் சலிக்காது பசியுமெடுக்காது ஆகையால் இந்த வம்புக்காரிகளின் சங்கதிகளைப் பற்றியும், சகவாசத்தைப் பற்றியும், பராசரர், வியாசர், மனு, வாச்ஸாயனர், கம்பர், காளமேகம், ஒட்டக் கூத்தர், ஔவைமுதலான ஆதிகாலத்து வித்வான்களெல்லாம் தனிக்கவிகளாகவும், கதைகளாகவும், பாரதம், இராமாயணம் இப்பேர்க்கொத்த பெரிய நூல்களிலும் (கலப் பாலுக்குத் துளிபுரை) என்பதுபோல அனேகயிடங்களில் திருஷ்டாந்திரமாகவும் கூறியிருக்கின்றார்கள் இக்காலத்து வித்துவான்களும் விட்டுவிட்டார்களோ வென்றால் அதுவுமில்லை ம-௱-௱-ஸ்ரீ, ஆ-சி-முருகேசமுதலியாரவர்களும், ம-௱-௱-ஸ்ரீ கு-வேத நாயகம் பிள்ளையவர்களும், ம-௱-௱-ஸ்ரீ, த-சுந்தரராஜசர்மா அவர்களும், இன்னு மனேக பத்திராதிபர்களும் (யானைக்குத் தீனி போடுவதுபோல்) மாறுவாரியாய் எழுதி

வைத் திருக்கிறார்கள். ஆதிகாலந்துடங்கி ஒவ்வொருவரும் எவ்வளவோபிரயாசைப்பட்டு (தாலாட்டுவதுபோல் போராட்டமிட்டு) சொன்னதெல்லாம் பொதுநலத்தைப் பற்றியேயொழிய வேறல்ல மேலும் பிர்மா, விஷ்ணு, ருத்திரன்முதலிய தேவர்களும் தங்கள்தங்கள் பெண்டாட்டிகளைக் கீழேவிட மனமில்லாதவர்களாகச் சிரத்திலும் உரத்திலும் துடையிலும் தாங்கிக்கொண்டு கரும்பும் ரசமும்போல இணை பிரியாமற் பொருந்தி வாழ்ந்தார்களென்று பல புராணங்களாலுந் தெரியவருகிறது அப்படியே இக்காலத்திலும் ஒருவனுக்கு ஒரு பெண்சாதி வந்தவுடனே புருஷனுக்குரிய பெரியோர்களால் ஆசீர்வதிக்கப் பெற்றவளும், புருஷனுடைய தோழர்கள், பிறவிகள் முதலிய புருஷனுக்குக் கீழ்ப்படிந்தவர்களால் மரியாதை பெறப்பட்டவளாயும், புருஷனுடைய தாய் தந்தையர்களால் கையாண்ட சொத்துகளுக்குச் சுதந்திரமுடையவளாயும், சில காலத்திற்குள் புருஷன் கிரகத்திற்கு மூலபுருஷியாகவும் புருஷனுக்குப்பின் புருஷனுடைய பிதுரார்ச்சித சொத்துகளுக் கெல்லாந் தானே அதிகாரியாகவும் யேற்படுகிற தன்னியில் புருஷன் செய்கிற தானதர்மமென்கிற புண்ணியத்திலும் பேர்ப்பாதி சொந்த முடையவளாயிருப்பதினால் பூவும் மணமும்போல் பெண்சாதி யென்பவள் புருஷ தேகத்திற் பேர்ப்பாதியென்று எல்லா மறையும் சொல்வதற்கிணங்க அர்த்தநாரீஸ்வரத்தைப் பிரத்தியட்சமாய்த் தெரிசிக்கலாம். நல்ல பெண்களின் இல்வாழ்க்கையழகைகாதிற்கேட்பதற்கே கர்ணாமிர்தமாய் உடம்புபூரிக்குமானால் அந்த உத்தமிகளுடன் ஒத்துவாழும்பத்தாவுக்கு எந்தக்காரியந்தான் சித்தியாகாது.

(இருக்க,)

குடும்பசனியனேன்றால் யாராருக்குத்தகும்.

உத்தமம், மத்திபம், அதமம், அதமாதமம், என நான்குவிதபார்வைகளுண்டு அவற்றில் உத்தமம், மத்திபம், அதமம் இம்மூன்று பார்வையும் தள்ளி அதமா அதமத்தையே சதமாகக்கொண்டு புருஷன், மைத்துனன், மாமன், மாமி அண்டையயலார் யாரைப்பார்த்தாலும் குளிர்ந்தபார்வையேயில்லாமல் ஏறயிறங்க உருமி யுருட்டி மிரட்டிவிரட்டி புலியைப்போல் புருவத்தைநெரித்து பெரும்பார்வைபார்க்கிற பூதப்பிறப்பும் சம்சாரியா?

எள்ளத்தனையாவது நல்லகுண மென்பது உள்ளத்தில்லாமல் பள்ளத்தில் விழுந்த யானையைப்போல் புருடன் மனதைத் திடுக்குத்திடுக்கென்று பதறும்படியாக படுக்குப் படுக்கென்று பேசி குலையுங் குடலும் பதறவைக்கும் பரம சண்டாளியும் சம்சாரியா?

எலுமிச்சம் பழத்தை நகுகாட்டும் எட்டிபழம்போல மேனியெல்லாம் சிவந்த அழகும், அழகுக்குத்தகுந்த சேலையும் ஆணியடித்த மரம்போல் ஆபரணமுந் தரித்து மினுக்கி குலுக்கி மேல்பல்லைக் காட்டினாலும் குடித்தனத்தில் அடங்காத குட்டிச் சாத்தியும் சம்சாரியா?

ஏரு பிடித்தவன் என்னசெய்வான்
பானை பிடித்தவள் பாக்கியம்.

என்பதுபோல ஏதோ அதிர்ஷ்ட வழியால் அண்டை வீட்டுக்காரி நகை போட்டுக்கொண்டால் துர் அதிர்ஷ்டம் பிடித்த துரோகிமுண்டை சும்மாயிருக்கக் கூடாதா அடா பாவி உன்னைக் கட்டின நாள்முதல் கட்டவுண்டா, சுழட்ட உண்டா, உண்ண உண்டா, தின்ன உண்டா, ஈரச்சுவரே எரியாத கொள்ளியே, இதுவுமோ ருழைப்பா இத்தப்பிழைப்பு நாயும் பிழைக்காதா வென்று புருஷனைக் கண்ட நேரமெல்லாம் பொன் வறலாய் வறுத்துக்கொண்டு உண்டசே

ரும் உடம்பிற் பிடிக்கவொட்டாமல் ஒடுங்க வொடுங்கப்பே சுகிற அடங்காப்பிடாரியும் சம்சாரியா?

இல்லாதவனோ பொல்லாதவனோ வென்று எல்லாருஞ் சொல்லும் பழமொழியைப்போல் இல்லாதவன் பெண்டாட்டி யெல்லாருக்கும் வெள்ளாட்டி யென்பதற்கிணங்க வருமையென்கிறநோயினால் பொருமையென்பதை மறந்தாளென்று முடிவு கட்டினாலுங் கட்டலாம் (ஒத்துநடக்கிற வீட்டில் குத்தம் நடக்காதென்பது போல) அத்து மீறினாளென்று எண்ணிக்கொண்டு சுத்த மூடனைப்போல் சும்மாயிருப்பவனும் உண்டு மற்றொருவன் திருடுவானோ,அள்ளுவானோ, தெய்வமே கொடுக்குமோ நம்ம பெண்சாதிதானே யென்றும் நாளை பின்னைக் குதவுமென்றும் காதை மூக்கை மூடி கணிச்சமாய் வைத்திருந்தாலும் அதுவும் போதாமல் கழுதையைப்போல் கத்துகிறாளே அவளும் சம்சாரியா?

அங்காடிக்கூடையை சிங்காரமா யழைத்து கெங்காதேவியைப்போல் வாய்குளிரப்பேசினால் வயிற்றின் கொடுமைக்காக வாய் கொடுக்கிறார்கள் அதன் பிறகு கொடுத்தது பாதி, எடுத்ததுபாதி, அள்ளுபாதி, கிள்ளுபாதி, கொசுருபாதி, பிசுருபாதி இப்படியாக அங்கம்பதைத்து ஆவென்று கத்தும்படி ஏழைகள் வயிற்றில் நெருப்பைக்கொட்டி வாயில் கோலைக்கொடுத்து வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு கூடைக்காரர்களை வாட வைக்குங் கொடும்பாவியுஞ் சம்சாரியா?

(தேடி திருவிளக்கேற்று) என்னும் பழமொழிக்கிணங்க ஆக்கவும் அரிக்கவும் தின்னவும் உண்ணவும் வீடுமுழுதும் வெளிச்சங் கொடுக்கவும் இலட்சுமியென்று கையெடுத்துக் கும்பிடவும் இவைமுதலிய யின்னும் அனேக சவுகரியங்களுக்கல்லவா அந்திபட்டால் வீடுதோறும் விளக்கேற்றுகிறார்கள் ஊரடங்கிவீடடங்கி உண்டு உறங்குஞ் சமயத்தில் விளக்கை நிறுத்தடி வேங்கையம்மா ளென்றால் குந்தாணியைப்

போய் குறுக்கே நின்று முந்தாணியால்வீசுகிற மூதேவியும் சம்சாரியா?

ஊருக்காவது மற்ற யாருக்காவது அல்லது சிலபேருக்காவது நல்லவனோ கெட்டவனோ எந்தபேருக்காவது தலையைக் கொடுத்து (பெரிய பெருமை பேருபட்டதுபோல்) ஓடியுழைத்து நாளை பின்னைக்குதவு மென்று இளநீரைப்போல் துளி துளியாய்ச்சேர்த்து குடியுங் குடித்தனமும், வீடும் வாசலும் வேணுமென்று சேர்த்த புருஷனானவன் ஏதோ மனவருத்தத்தினால் உரக்கப் பேசுவானே யாகில் முட்டமுழுக்கப் புட்டத்தையமுக்கிக்கொண்டு சும்மாயிருந்த அம்மாளுக்கு சிம்மாளங்கிளம்பி வீராவேசமா யெழுந்துக்கொண்டு ஓ இந்த வாழ்வெல்லாம் யாராலேவந்தது தெரியாதோ நினைத்துப்பார்க்க நேரமில்லையோ என்னைத் தொட்டபின்னாலல்லவோ பொன்னிவந்து காலைப்போட்டாள் இந்த முடுக்கெல்லாம் என்னெதிரில் முடுக்காதே பத்திரம் பத்திரமென்று முத்தத்திற்கும் வீட்டிற்கும் எத்தனை தரமானாலும் பேசிப்பேசித் திரிகின்ற பெரும்புலியும் சம்சாரியா?

முலவருக்கே மொந்தை தண்ணீரில்லை
ஆலய்முழுது அபிஷேகமாம்.

என்பதுபோல் கண்கண்டதெய்வமாகிய கொண்டபுருஷன் தருணந்தப்பி எடுத்தடிவைத்து எங்கும் போகாமல் படுத்த படுக்கையாய் (பண்டிதர்கையில் மருந்தும் பத்தியக் கறியில் பொழுதுமாக) கழித்துக் கொண்டிருக்கும்போது அல்லது உத்தியோகத்தில் லீவு கிடைக்காமல் (மத்தியானத்தில் வந்த விருந்தாளியைப் போல்) திகைதப்பி யிருக்கும் போது திருவொற்றியூரில் தேரடி, மைலாப்பூரில் மண்ணடி அண்ணாமலையில் அபிஷேகம், காஞ்சீபுரத்தில் கருடசேர்வை, விரிஞ்சிபுரத்தில் வீணை வாத்தியமென்று (கோண்ட தெய்வம் குண்டுக்கரணம் போடும்போது) பட்டுப் புடவையும்

கட்டுசோறும் பறக்கக் கட்டிக்கொண்டு கண்டவிடமெல் லாஞ் சென்டாடிவருகிற பெண்டாட்டியும் சம்சாரியா?

(தேருந்திருவிழா ஊருக்குள்ளேயானாலும் பேருங்கு லமும் விளங்குகிறவளானல் பூவும் மணமும் ஒத்திருப்பது போல்) புருஷனையாவது பெரியோரென்கிற மாமி நாத்தி யையாவது கேட்டுக்கொண்டு நல்ல துணையாய்க் கூட்டிக் கொண்டு எட்டிப்பார்த்து திட்டென்று வீட்டைவந்து சேருவாள் "ஆண்டைக்கு ஆளேக்காட்டி ஆண்டை பெண்டா ட்டிக்கு வாலேக்காட்டி" என்பதுபோல புருஷனுக்குப் பல் லேக்காட்டி மாமிக்குக் கொல்லேக்காட்டி கமலவாணிக்குச் சமானமான ஞாயகுன்யங்களேத் துணையாகக்கொண்டு "ஊ ரெல்லாஞ் சுத்தி என்பேருமுத்தி" என்பதுபோல சொல் லாமல் கொள்ளாமல் எல்லேயெல்லாஞ்சுத்தி இவ்விடத்தில் வந்தபோது இவ்வளவுநேரம் எங்கடிபோனாய்மங்களமேயெ ன்றால் கொல்லேக்குப்போனேன் குளத்துக்குப்போனேன் போனாலென்ன வரத்தெரியாதா நானென்ன சின்னக்குழந் தையா இந்நேரமாகியும் உங்களுக்குக் கண் அவியவில்லேயா வென்று கொஞ்சமாவது அஞ்சாமல் கிண்ணாரத்தைப்போல் விண்ணாணம் பேசுகிற பெண்பிசாசியும் சம்சாரியா?

"வடித்தால் காணுமா பொங்கினால் காணுமா" என்ப துபோல்அடிநாளிலிருந்து குடும்பத்தில்பழகிய பாட்டியோ மாமியோ தன் குடும்பத்திற்கேற்ற அமுதுபடி கொடுத்து சமையடி அம்மாளென்றால் குத்தும்போது பாதி கொழிக் கும்போது பாதி அரிக்கும்போது பாதி உலேயில் போடுகிற ஊரல் பாதி இப்படியாகக் கண்ணுக்குட்டியின் வாயைப் போல் மெண்ணவண்ணமாயிருந்து நிறைப்பானேச் சோற் றை அறைப்பானேயாக்குகிற அலமாறியும் சம்சாரியா?

பாலுக்குப் பூனே பத்திரமாய்க்காவலிருந்தது போல் மேனு க்குமாத்திரம் சம்சாரத்தில் சிக்கனமாயிருந்து மாமிநாத்தி

கண்ணில் தெள்ளின மண்ணைத் திடுக்கென்று போட்டுத் தெருவில் போகிற ஊசப்பருப்பு, தோசை பயறு, காரைப் பழம், கிரைப்பழம், நாகப்பழம் முதலிய மூசுண்டைகளைக் கண்டால் துட்டோ, காசோ, அல்லது நெல்லோ, அரிசியோ, நிறைந்த வீட்டை அள்ளியள்ளிக் கொள்ளையிட்டு பெரும்பானையெல்லாம் வெரும்பானை யாக்குகிற பெருந்தீனிப் பிசாசியும் சம்சாரியா?

ஆனைக்கும் அடிசரக்கும், என்பதுபோல ஏதோ வினைப் பயனாலாவது கிரகசாரத்தாலாவது புருஷனானவன் வியாதியஸ்தனாகி பாயும் படுக்கையுமாக யிருந்தால் இதுதான் சமயமென்று (தீபாராதனைசெய்யத் திக்கில்லாத்தெய்வம்போலத்) தானே தலைவிரித்துக்கொண்டு எத்தனை மரியாதையாய் சொன்னாலும் சற்றேனு மிரக்கமில்லாமல் கேட்க வேண்டிய கேள்வியெல்லாம் பாக்குப் பிளந்ததுபோல் ஆக்க அரிக்கத் திரிந்துக்கொண்டே சாக்குவைத்துத் திட்டுகிற சனீஸ்வரனும் சம்சாரியா?

உழைக்கிறவன் உழைத்து உள்ளதேல்லாங் கோண்டுவேந்துபோட்டால் அரிசியில்லை நெல்லுமில்லை கேட்காமல் வீட்டோடிருந்து அறைக்கிறவள் அறைத்துக் குலைக்குக் கொட்டிக்கொண்டு கூப்பிடாமல் சும்மாயிருந்து சுகமாய் வாழாமல் அத்தான் வாழ்ந்தது ஓரகத்தி தாழ்ந்தது மச்சினன் கெட்டது மாமியார் பட்டது நான் அறிந்த வாழ்வு நாடறிந்ததிராதாவென்று அன்றுடம் யாரையாவது ஒருசித்து வலித்துக்கொண்டு கெலித்தேனு தோர்த்தேனுவென்று மல்லுக்கொடுக்கிற எல்லைப்பிடாரியுஞ் சம்சாரியா?

குபேரன் வீட்டில் பிறந்தவளானாலுங் கூறை வீட்டுக்காரனுக்கு வாக்கைப்பட்டால் பிறந்த வீட்டின் பெருமையை என்னேரமும்பேசி புகுந்த வீட்டுச் சிறுமை பண்ணுனும் யேசிக்கணவன் மனதைக் கலுக்கென்று நடுங்கவும் எதிரிமுகத்தைக்கண்டால் யிரங்கிக்கொள்ளவும் பயிரங்கமாய்ப் பேசுகிறபகையாளியும் சம்சாரியா?

நாயைக்குளிப்பாட்டி நடுவீட்டில் வைத்தாலும் வாலைக் கிளப்பிக்கொண்டு பீத் திண்ணப்போகும் என்பதுபோல அந்திசந்தி கடைகட்குப்போகாமலும், குளங்கிணற்றில் தண்ணீரெடுக்காமலும் உப்போடு ஒன்பது பருப்போடு பத்து என்றபடி எல்லாப் பொருளுங்கொண்டு கொடுத்துஅல்லா சாமியைப்போல் குந்த வைத்தாலும் அண்டைவீட்டு அப்தா, அடுத்தவீட்டுத் தொத்தா, மூன்றாம்வீட்டுமாமி, நான்காவீட்டு சோமி யென்று இன்னம் பலவாறாய் உறவுபிடித்துக்கொண்டு நாய்க்குவேலையில்லை நிற்க நேரமில்லையென்று ஊர்சுத்துகிற ஓடுகாலியும் சம்சாரியா?

பட்சிகளானது ஆகாயத்தினிடமாய்ப் பறந்தும் மற்றும் பல கானகங்களினிடமாகத் திரிந்தும் அந்திபட்டால் தன் கூடுகளிலாவது,மரம் விருட்சம் முதலிய சவுகரியமான யிடங்களிற் றங்கி சிரமத்தைப் பரிகரித்துக் கொள்வது போல் புருஷரானவர்கள் தங்கள் தங்கள் உத்தியோகம், கைத்தொழில் முதலிய முகாந்திரமாகப் பகற்பொழுதெல்லாங் கஷ்டப்பட்டு மாலையில் வீட்டிற்கு வந்தபோது தமது தேகசிரமத்தை மாற்றுமாறு தமக்குவேண்டிய உபசரணைக்காவது, குடும்பத்தையடுத்த சம்பாஷணை யாவது இன்பமாகப் பேசத்தொடங்கினால் (வந்தது சண்டை இறக்கடி கூடை) என்பதுபோல ஆ ஆ சொக்காயும், தலைப்பாயும், போட்டுக்கொண்டு ஒழுங்காய் ஊரைச் சுத்திக்கொண்டு வீட்டில் நுழைகிற கொழுப்பல்லவா வீட்டிலிருந்து உழைத்தா லல்லவா அந்தக் கஷ்டம்தெரியும் (மாலையிட்டநாளாய் மாடாயுழைத்து மண்வெட்டியாய்த் தேய்ந்தும் அந்திப்பட்டால் ஊரிழவெல்லா மேனக்குந்தானு) அல்லும் பகலும் அறுபது நாழியும் உங்களுக்குப் பொங்கியுடைக்க சரியாயிருக்கின்றதே தவிற எங்கேயாவது போக்கிடமுண்டாவென்று ஆக்கித்துலைக்கிறவரையில் சாக்கு வைத்துத் திட்டுகிற சதிகாரியும் சம்சாரியா?

"அறுபத்து நாலடி கம்பத்தின்மேலாடினாலும்
கீழேயிறங்கித்தான் தியாகங் கேட்கவேணும்."

என்பதுபோலபுருஷனுக்கும்,மூத்தாருக்கும், மைத்துனன், மாமியார், நாத்தனார், ஓரகத்திமுதலிய குடும்பத்தின் பெரியோர் சிறியோருக்குச் சரியானமரியாதையுடன் பிரியமாய் நடந்துகொள்ளாமல் திடுக்குத் திடுக்கென்று எடுத்தெரிந்துப்பேசி எத்தனைநாளைக்கு வீசி விளையாடினாலும் பெற்றாருக்கும் பெண்ணுக்கும் பேச்சிக் கிடமே யொழிய உயரஉயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பரந்தாகுமா, மின்னுக்கெல்லாம் பின்னுக்குமழை) என்பதுபோலவும், "ஆடுகொழுக்கிறதெல்லாம் இடையனுக்கு லாபம்" என்பதுபோலவும், ஆகட்டும் ஆகட்டுமென்று மனதில் வைத்துக்கொண்டுபோகட்டும் போகட்டு மென்று சும்மாயிருப்பதெல்லாம் சும்மா விடுவதற்கா "மலையின்மீது நெல்விளைந்தாலும்உரலுக்குள்ளேதான் மசியவேணும்) என்பதுபோல என்றைக்கிருந்தாலும் பெண்சாதியென்கிறவள் புருஷன்கையினால் மசியவேணுமேதவிற மசியாதிருக்க வழியேயில்லை (இதுதெரியாதாகிடாவே நுகத்தடிக்கு நான்குதானே) என்பதையும் எருமைக்கோமியம் எக்கியத்துக்குதவா தென்பதையும் எண்ணிக்கொண்டு அடங்கியொடுங்கிஅளவோடிருக்காமல் விழுந்து விழுந்து யெழுந்திருக்கும் வெறுஞ் சிரிக்கியும் சம்சாரியா?

"உழுகிற காலத்தில் ஊருக்குப் போய்
அறுக்கிறகாலத்தில் அரிவாளெடுத்து வந்தானும்."

என்பதுபோல வாழ்கிறநாளெல்லாம் வரிசைக்கெட்டு விடடங்காமல் வாசலடங்காமல் குந்திக் குடித்தனம் செய்யாமல் பூர்க்கிறநாளில், காய்க்கிறநாளில், பிள்ளைக்குட்டியைப் பெறாமல் தாய்வீட்டுக்கும், மாமிவீட்டுக்கும், ஓடியோடித் திரிந்து (ஊரெல்லாஞ்சுத்தி என்பேருமுத்தி) என்று ஒண்டியோரியாய்க் கண்டவிடந் திரிந்து காரியுமிழ்ந்து கண்டார் சிரித்து புருஷனுக்குப் பொழுது திரும்பிப் பாதி

நாளாகிப் பழக்கிறகாலத்தில் (சாலுங்காகமும் ஒன்றாய்ச்சேர்ந்ததுபோல்) காலும்முடங்கி வாயும்அடங்கி மேலுக்குமாத்திரம் சம்சாரம்செய்கிற காலச்சனியனும் சம்சாரியா?

ஐந்தில் வராதது ஐம்பதில் வருமா என்பதுபோலஒருத்தியும் ஒருத்தனுமாய் சம்சாரஞ் செய்துக்கொண்டு கேட்பாரில்லாமல் தன்னிச்சை நாடாய்த்திரிந்தாலும் கணவனென்கிற மதிப்பு கிணவிலாகிலும் இருக்கவேணுமல்லவா தண்ணீர் கேட்டால் கிணற்றி லிருக்கிறதென்றும் உண்ணீர் கேட்டால் அடுப்பி லிருக்கிறதென்றும் சோறு போடென்றால் ஆறப்போடென்றும் என்ன பதார்த்தமென்றால் தின்னும்போது தெரியாதா இதற்குள்ளே ஒரு ஆள் பாடஞ் சொல்லவேணுமோவென்று ஆடாதும் ஆடும்போது என்னடி இப்படி அத்துபத்தில்லாமல் போட்டகாலைப் போட்டவண்ணம் நீட்டிக்கொண்டு நாட்டியம் பண்ணுகிறாயே யாராவது அன்னியர்கள் பார்த்தால் என்னை மதிப்பார்களாவென்றால் அந்தமட்டும்போதும் புத்திபண்ணுகிறவரையில் ஆடாதே ஆண்பிள்ளைகளெல்லாம் வந்தவழி தெரியாதோ பெண்களில்லாமல் ஆகாயத்திலிருந்து குதித்தாரோ (அரைக்கீரைப்புழுவு தின்னுதவனுமில்லை அவுசாரிசையில் சோறுதின்னுதவனுமில்லை) அந்தமட்டும் நிறுத்தென்று நந்தவனத்துமட்டும் கைநீட்டுகிறவனும் சம்சாரியா ?

"என்னைப்போல் குரனும் என் அக்காளைப்போல் ஒயிலும் இல்லையென்னுமாங் கழுதை" என்பதற்கிணங்க புருடனாவது மற்றும் யாராவது ஏதோ ஒருபேச்சுவழியால் வாய்கொடுத்துவிட்டால் தன்மட்டில் பெருமையும் யோக்கியதையும் தானே புகழ்ந்துக்கொள்ளாமல் தன்னோடுபிறந்த தங்கை தமக்கைமுதலிய பாட்டி பூட்டிகளையெல்லாம் யிழுத்துக்கொண்டு ஆ ஆ நீயென்ன நீபிழைத்த பிழைப்பென்ன நீ அப்படிச்சொல்லும்படி யாச்சா நாங்களென்ன அற்ப சொற்பமானவர்களா "பூவைப்பற்றிநாறும் மணம்பெற்ற

தென்று'' நினைக்கவில்லையோ அந்தமட்டும் அடங்கினலாச்சு இல்லாவிட்டால் பாரென்று மேலுமேலும் தாறுமாறுமாய் உளறி வீட்டிற்கும் வாசலுக்கும் தாண்டுகால்போடுகிற கண்டாமிருகமும் சம்சாரியா?

"ஒய்யாரக் கொண்டையாந் தாழம் பூவாம்
உள்ளே மேயுமாம் ஈறும் பேனும்."

என்றபடி கந்தையானாலுங் கசக்கிக் கட்டாமல் ஐந்து நாளானாலும் உடம்புகுளிக்காமல் ஐந்துாட்டு அப்பாத்தையாய்த் திரிந்துக்கொண்டு தன்னைப்போல் வேலையற்றதண்டு பஜாரிகளுடன் குந்திக்கொண்டு புருஷன்செய்தபோக்கிரித்தனமும், மச்சினர்செய்கிற மாராட்டமும், மூத்தார் பேசுகிற முரட்டுத்தனமும், ஓரகத்தி நாத்திகள் உதாசினமும் இத்தனையும் பொறுத்து நித்தமும் பத்துபேரில் கெலித்து வருகிறேனென்று கையும் வாயுங் கலந்துப் பேசும்போது அன்னியர்கள் கேட்டால் என்னமாயிருக்கும் இப்படியே தினந்தோறும் தன் குற்றத்தைத் தரையில் போட்டுவிட்டு புருஷன்மீதும், புருஷன் குடும்பத்தின்மீதும்,புறங்கூறுகிற அராமிக்கோலும் சம்சாரியா?

"ஈரைப் பேனாக்கி பேனைப் பெருமாளாக்கி" என்னும் பழமொழிபோல் தேங்காயில் இளநீர் சேருவதற்கிணங்க அன்றாட வரவில் குன்றிமணிபோல் சேர்த்து வெள்ளியும் பொன்னும் அள்ளியள்ளிச் செய்யாவிட்டாலும் கிள்ளிக்கிள்ளியாவது நாளைப் பின்னைக்குதவுமென்று ஏதோ சில நகைகளைச் செய்துக்கொடுத்தால் அதை யப்படியே வைத்துக்கொண்டு சொற்படியே கேட்காமல் (அடுக்குகிற அருமை உடைக்கிற நாய்க்குத் தெரியுமா) என்பதற்குச் சரியாய் வேலங்காய்க்கொலுசை ஆலங்காய்க்கொலுசும், ஆலங்காய்க் கொலுசை அத்திக்காய்கொலுசும், அத்திக்காய்க் கொலுசை நெல்லிக்காய்கொலுசும், நெல்லிக்காய்கொலுசை பில்லுக்காய்கொலுசும், சுருள்கொலுசைப் பட்டைக்கொலுசும்

பட்டைக்கொலுசை ரெட்டைக்கொலுசும் இப்படி யெந்நேரமும் நகைகளைச் சின்னபின்னமாய் அழித்தழித்துச் செய்தால் (அளக்க அளக்கக் குறையுமென்பதுபோல) வெள்ளியையும் பொன்னையும் பொருளையும் போக்கடிக்கிறபோக்கற்றவளும் சம்சாரியா?

"ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்
தன் பிள்ளை தானாய் வளரும்."

என்பதுபோல மைத்துனன் பிள்ளையானாலும், மூத்தார் பிள்ளையானாலும், தன் சக்களத்திப் பிள்ளையானாலும் உள்ளத்தில் கலுக்கென்று யெண்ணமிடவொட்டாமல் தழுவிவளர்ப்பவள்தான் தாயிலும் பெரிய தாயார். (குழந்தையுந் தெய்வமுங் கொண்டாடு மிடத்தில்) என்பதுபோல அந்தப்பிள்ளைகளும், அதைப்பெற்ற தாய் தகப்பனும் என்ன துதிப்பார்களோ, என்ன மதிப்பார்களோ, என்னகொண்டாடுவார்களோ, என்ன வாழ்த்துவார்களோ அந்த அவாவை யாம் என்னென் றெழுதலாம் இப்படி நடப்பவர்கள்தான் கற்புடையவர்களென்று பெயர், ஆக்கும்போது வந்தால் ஆங்காரமும், உண்ணும்போது வந்தால் ஓங்காரமும் கண்டயிடத்தில் காதைமுருக்கி துண்டத்தனமாய்த் துடையை முருக்கி பண்டம் பலகாரத்தில் பாஷாணத்தைவைத்து தன் பிள்ளையை மாத்திரம் தழுவி வளர்த்து அன்னியார் பிள்ளையைக் கண்ணில் காணமல் ஆட்டிப் படைக்கிற காட்டுமிருகமும் சம்சாரியா?

"இடைத்தெருவில் கோலம் வரும்போதே
குசத்தெருவு எங்கேயென்றாளாம்."

என்பதுபோல முட்டையிற்குஞ்சைப் பிட்டுவளர்த்த தாயையுந் தகப்பனையுந் தாங்க வொட்டாமல் அண்ணன் தம்பிகளை ஆதரிக்க வொட்டாமல் கொண்டவன் குணத்தைக் கெடுத்து தலையணை மந்திரத்தை தலைக்குமேலேற்றி ஆளைத்தட்டி அடிமடியில் கட்டிக்கொண்டு (நண்டுக் குடு

வையை நடுத்தெருவில் உடைத்ததுபோலவும்) ஒரு குடும்பத்தை இரண்டு குடும்பமாக்கி வேணுமென்று கொண்ட மாமன் மாமிக்கு மாறில் ஆணியடித்ததுபோலவும் போன கிழமை போக புதன்கிழமை வந்தாள் என்பதுபோலவும் மூன்றுநாள்கூட ஊணிவாழாமல் சின்னக்குடுவையும் வர்னப்புடவையும் தூக்கிக்கொண்டு இடுப்புவைத்தயிடமெல்லாம் அடுப்பு வைக்கிறவளும் சம்சாரியா?

"மீந்த சுண்ணும்பையும் மெலிந்த ராஜாவையும்
விடக்கூடாது." என்பதுபோல

கட்டினபுருஷன் கொட்டிக் கிழங்குபோல் நன்றாயிருக்கும்போதெல்லாங் கொண்டாட்டமா யிருந்து வருத்துமானம் உள்ளபோது சிரித்தமுகமாயிருந்து (பொல்லாத வேளை எல்லாருக்கும் உண்டென்பதுபோல) கைவரண்டு வருத்தப்பட்டு மெய்வருந்தி எண்ணமிட்டிருக்கும்போது நெய்விட்ட பந்தம்போல நிஷ்டூரமா யெரிந்து விழுந்து இந்த சம்சாரம் செய்ய என்னால் முடியாதென்று ஏடாகூடமா யெடுத்தெறிந்துப்பேசி நாலாபக்கமுங் கோலங்காட்டி நெஞ்சும் மனமும் புண்ணுய்ப்பண்ணுகிற நஞ்சுக்கண்ணியும் சம்சாரியா?

"பூவாளழகியாம் பொற்கொடியாம்
போறவிடமெல்லாஞ் செருப்படியாம்."

என்பதுபோல காலில் சக்கரமிருக்குமோ கையில் கத்திரியிருக்குமோ நாவில் நாக்குபூச்சி யிருக்குமோ, நாரதன் பிறந்த நட்சத்திரமோ யார்தா னறிவார்கள் (ஏமி செப்பினு லெஞ்ச புத்திபோது) என்பதுபோலவும், (திறந்த வீட்டில் நாய் நுழைவதுபோலவும், அஞ்சு வீட்டுக்கு அப்பாத்தை பத்து வீட்டுக்குப் பதிவிரதை) என்பதுபோல பொழுதுவிடிந்தால் பழுதில்லாமல் பத்துவீட்டில் நுழைந்து ஒரு வீட்டுச் சங்கதி இரண்டுவீட்டில் இரண்டுவீட்டு சங்கதி நாலுவீட்டில் சொல்லி கேட்பார் சங்கதியை பார்ப்பவர்க

ளுக்கும், பார்ப்பவர் சங்கதியைக் கேட்பவர்களுக்கும் ஒன்றிரண்டாய் முடியிட்டு ஒருவர்க்கொருவர் ஆக வொட்டாமல் (நாக்கு சலாஞ்செய்துக்கொண்டு) போறவிடமெல்லாஞ் செருப்படி படுகிற ஆருநெருப்பும் சம்சாரியா?

தன்னைச்சிரிப்பது தெரியாதாம் பரங்கிமலைக் குரங்கு
பக்குபக்கென்று சிரிக்குமாம் பல்லாவரத்தை பார்த்து

என்பதுபோல (அடக்கம் ஆயிரம் பெறும் துடுக்கு துட்டுப் பெறாது) என்பதற் கிணங்க பொருமை கடலிலும் பெரிதென்று நினைத்துக்கொண்டு நமக்கென்ன நஷ்டமாய்ப் போனது ஒருவர் சிரித்தால் உலகம் சிரிக்கும் இப்படியெல்லாம் நடக்கிறதப்பிலிக்கல்லவா (செருப்படியுந்தேவாரமும்) சிந்தாமற் கிடைக்கும் (அந்தமற்ற மொரந்தைக் கல்லவா) இந்த வார்த்தைகளெல்லாம் புளிக்காத எலுமிச்சம்பழம் உலகத்திலுண்டா (ஊத்தைபோகக் குளித்தவனு மில்லை பசிபோகப் புசித்தவனு மில்லை) நம்ம முதுகில் என்னயிருக்கின்றதோ நாமறிவோமா உப்பைத்தின்றவள் தண்ணீர் குடிக்கிறுள் என்றும், சொல்லாமல் பிறக்காது அள்ளாமல் குறையாது என்றும் உத்தம ஸ்திரீகளெல்லாம் சந்தோஷப்பட்டு சிறிய புத்தகமாயிருந்தாலும் பெரிய புத்திகளைச் சொல்லிக்கொண்டு வருகிறதே இதுவல்லவா அருமையான புத்தகம்.

"மடல்பெரிது தாழை மகிழினிது கந்தம்
உடல்சிறிய ரென்றிருக்கவேண்டாம் - கடல்பெரிது
தண்ணீருமாகா ததனருகே சிற்றூரல்
உண்ணீரு மாகி விடும்."

என்றபடி பெரிய பெரியபுத்தகங்களை இரவும் பகலும் படிப்பதினுல் பொருமையும், திறமையும் ஒரேமொத்தமாய் லபித்துவிடுமா (சுண்ணாம்பிலிருக்கிறது சூட்சம் சூட்சத்திலிருக்கிறது மோட்சம்) என்பதுபோல அருமை தெரிந்த பெண்களுக்கெல்லாம் எவ்வளவுங் கோபமிருக்காது. (உள்ளதைச் சொன்னுல் நொள்ளைக் கண்ணனுக்கு கோப்பாளம்)

என்பதுபோல குடியைக்கெடுக்கிறகுண்டுணிகளும், கொண்டவனை மதியாத ஜண்டி மாடுகளும், கண்டவிடஞ் சுத்துகிற தண்டுயோரிகளும், மூசுண்டைத் திண்கிற மூதேவிகளும், குடியில் அடங்காத குட்டிச் சுவரும், சொற்பேச்சுகேளாத சுரணைகெட்டவளும், பெரியோரை மதியாத பைசாசங்களும், பொருமையில்லாத பூதங்களும், அருமை யறியாத அமரவாசை யெல்லாம் (தன்னப்பம் தன்னைச்சுட்டால் ஒட்டப்பம் வீட்டைச்சுடும்) என்பது போலவும், குற்றமுள்ள நெஞ்சு குருகுரு வென்பதுபோலவும், கோழியைக் காணுமென்று தேடும்போது என் தலையில் கோழிமயிர் இருக்கிறதாபார்த்துக் கொள்ளென்று தானே வந்ததுபோலவும், அடங்காச்சாமி நான்தானென்று தெரியும்படியாய் இது ஒரு படிப்பா இது ஒரு புத்தகமா இது ஒருகதையா இதைவிடவேறே பிழைப்பு கிடையாதா (வேலையற்ற அம்பட்டன் மகளைப் பிடித்துச் சிறைத்தானும்) என்பதுபோல பெண்களுக்கு புத்திசொல்லத்தானு படித்துக்கொண்டான் இவனும் ஒரு கவிராயனுவென்று அவமானமாய்ப் பேசுவார்கள் (தன்னெஞ்சுக்குத்தானே சாட்சியென்று) பொன்னைப் போல் சும்மாயிருக்காமல் அனியாயமாய்ப் பேசுகிற சனியன்தான் (குடும்பசனியன்) இனியாவது இந்தக் குடும்பசனியன்களுக்கு நல்ல புத்திவந்து இல்லற சாம்பிராச்சியங்களை அடையக் கடவது. சுபம் சுபம்.

உத்தமிகள் வாழ்க உலகம் வாழ்க
பத்தர்கள் வாழ்கப் பரமன் வாழ்க
புத்தகம் வாழ்கப் புலவர் வாழ்க
இத்தரை மீது யானும் வாழ்க.

உ

வடிவாம்பாள் துணை.

கற்பு நிலைமையிற் சிலது.

“பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண்டாகப் பெறின்.

(என்றபடி,)—ஒருவன் பெறுதற்குரிய பொருள்களுள் மனையாளினும் உயர்வாகிய பொருள் எவை யிருக்கின்றன, அவளிடத்தே கற்பென்னுங் கலங்கா நிலைமையிருக்கப்பெற்றால், என்று திருவள்ளுவநாயனார் திருவுளம்பற்றினமையால் உலகத்தில் பெண்களாய்ப் பிறந்தவர்கள் தமக்குரிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் நால்வகைக்குணங்களுக் கேதுவாக மனதைப் பலவிடத்துஞ் செல்லவிடாது நிறுத்திக் கற்புநிலை கெடாதிருக்க வேண்டும்.

அந்நாற்குணங்களில் நாணென்பது நாணம், மடமென்பது எல்லாம் அறிந்தும் அறியாததுபோ லிருத்தல், அச்சமென்பது என்றுங் காணாததைக் கண்டவிடத் தஞ்சுதல் பயிர்ப்பென்பது கணவரல்லாதவர் கை மேற்படின்உடம்பு அருவருத்தலாம்.

விவாக மில்லாமல் கன்னிகைகளா யிருக்கும் பருவத்தில் தாய்தந்தையர் ஆதீனத்திலும்,விவாகமாயினபின் கணவர் ஆதீனத்திலும், கணவருக்குப் பிற்காலம் புத்திரர் ஆதீனத்திலும், புத்திர ரில்லாவிட்டாற் சகோதரர் ஆதீனத்திலுமிருக்கவேண்டுமே யல்லாமல் ஒருபோதும் பெண்கள்சுவாதீனப்பட்டு யிருக்கலாகாது.

கொண்டகொழுநனை மேன்மையாகப்பாவித்து அவன் சொல்லைத்தடுக்காமல் அவனுக்குக் கீழமைந்து பக்திவிநயத்துடனே “பொய்சொன்ன வாய்க்குப் போஜனங் கிடையாது” என்பதனாற் பொய்பேசாமல் கறந்தபால் கறந்தபடி அவன்

விஷயத்தில் உண்மையாய் "ஊசியுஞ் சரடும்போல" மனைவியானவள் அவன் கருத்தின்வழி ஒழுகல்வேண்டும்.

பெண்ணைக் கட்டிக்கொடுக்கும்பொழுது பிதா வித்தியாசாதுரியமுள்ள பண்டிதனுக்குக் கொடுக்கவேண்டுமென்றும், தாயானவள் மகள் ஐஸ்வரியவானுக்கு வாழ்க்கைப்படவேண்டுமென்றும், சுற்றத்தார் நல்ல குலஸ்தன் வந்து வாய்க்கவேண்டுமென்றும், அந்தப் பெண் அழகிற் சிறந்தவனை நாம் வரிக்கவேண்டுமென்றும் நினைக்கிறதுண்டு. ஆயினும் அது அப்படியே வாய்க்குமா? தெய்வச் செயலின்படியல்லவோ சம்பவிக்கும்.

"குலமகட் கழகுதன் கொழுநனைப் பேணுதல்" என்பதனால் தன் புருஷன் அழகிருந்த ஊரில் குடியிருந்தறியாத குரூபியாயிருந்தாலும் அவனை நவமன்மதனாகவும், என்றும் அசாத்திய ரோகமுடையவனாயிருந்தாலும் அரோகதிடகாத்திரனாகவும், அவன் தம்பி நான்தான் எனக்கொன்றும்வாராது என்றவனைப்போல வயிற்றைக் கிழித்துப்பார்த்தால் வாரடையுங் கிடையாத நிரந்தர குட்சியாயிருந்தாலுங் கல்விக்களஞ்சியமாகவும், பாண்டவர்களை நானறியேனா கட்டிற்கால்போல மூன்றுபெயரென்று வாயினாற்சொல்லி இரண்டு விரல்காட்டி நிலத்தில் ஒருகோடு கிழித்தவனுக்கு இவன் குறைந்தவனா என்னும்படி கணக்கறியாத நிர்மூடனாயிருந்தாலும் சேஷசாயிபோல நிபுணனாகவும், உண்ணச் சோற்றுக்கும் கட்டக் கந்தைக்குங் கதியற்று அடுப்பிற் பூனை தூங்க கையில் அரைக்காசுக்கும் வழியில்லாத அஷ்டதரித்திரனாயிருந்தாலும் குபேரசம்பத்துடையவனாகவும், கொக்குபோல் நரைத்துக் கண் குழிந்து பல்வீழ்ந்து வில்லைப்போல் வளைந்த முதுகுடைய கூனற்கிழவனாயிருந்தாலும் நல்ல யவ்வனமுடைய விடனாகவும் பாவனைசெய்து அவனை அவமதியாமல் அனவரதமும் பேணி நடக்கவேண்டும். "கல்லென்றாலுங் கணவன் புல்லென்றாலும் புருஷன்" என்கிறார்களே!

மனைவியானவள் கணவனுக்குத் தானேபோயிப் பாதப் பணிவிடைசெய்பவளும், மந்திரிபோலச் சமயோசிதமறிந்து நல்லாலோசனை சொல்பவளும், ஸ்ரீ மகாலட்சுமிபோலப் பெண்ணைப் பெண் யிச்சிக்கத்தக்க அதிரூபசௌந்தரியவதியும், பூமாதேவியைப்போலச் சலியாத பொறுமையுடையவளும் வேசைபோலப் பர்த்தாவைச் சரசகேளிவிநோதத்தாற் பிரியப்படுத்துகின்றவளுமா யிருப்பதன்றி அன்புள்ள தாய்போல இனிய உணவுகளாற் போஷிக்கின்றவளுமா யிருக்கவேண்டும். "தாய்க்குப் பின் தாரம்" என்று உலகம் சொல்லுகின்ற தல்லவா?

ஒருவேளை கணவன் கோபித்தால் தானுங்கூடக் கோபியாமல் அவன் தனக்கு அனுக்கிரகித்ததாகவும், அவன் வைதால் அவனைத் தானும் வைதிடாமல் தன்னை அவன் வாழ்த்தினதாகவும், அவன் கைசேஷ்டை முதலிய தீமைகளைச்செய்தாலும் அவைகளை அப்படி நினையாமல் புருஷன் சரசத்தால்செய்யுந் தாடனங்களாகவும் நினைத்துச் சாந்தத்தோடும்அவனருகில்வந்து கை எப்படி நோகின்றதோ? பாதம் எப்படி ஊருகின்றதோவென்று அவனுக்கு இதஞ்சொல்லி அவன் கோபத்தைத் தணிக்கவேண்டும், அல்வாறுசெய்தால் அவன் பொல்லாத மூர்க்கனானாலும் அவனுடைய கல்லான நெஞ்சுங்கரைந்து பரமசாதுவாவான்அல்லவா?

"வல்லடி வழக்கை சோல்லடி மாமி" என்று மாமியுடனே வாதுசெய்யாமல் அவளைத் தாய்போலக்கருதி அவள் காலிற்பட்டது தன் கண்ணிற்பட்டதாகக்குடும்பபாரத்தையெல்லா மேந்திக்கொண்டு அவளுங் கண்மணியாகிய என் செல்வமருமகளைப்போல தேடக்கிடைக்குமாவென்று சொல்லும்படி அந்நியோந்நியமாய்நடந்து "மாமியார் மெச்சிய மருமகளில்லை"என்னும் பழமொழியைப் பகைக்கவேண்டும்.

இவள் எங்களுக்கு மருமகளா அல்ல எங்கள்குலதெய்வமே இப்படி உருக்கொண்டுவந்ததென்று மகிழும்படி மாமனாரைத் தந்தைபோலப் பூசிக்கவேண்டும்.

கணவனுடைய சகோதரர்களைப் பேதமாக யெண்ணாமல் பரிபாலிப்பதனால் அவர்களில் மூத்தவர்கள் இவள்தான் எங்கள் புத்திரியென்றும், இளையவர்கள் இவள்தான் எங்களைப்பெற்ற தாயென்றுங் கொண்டாடும்படி செய்யவேண்டும்.

அவர்களுடைய மனைவிமார்கள் தன்னுடைய உசிதகுணத்தைக்கண்டு இவள் பெண்கள் நாயகம், பெண்கள் பாத்திரம், பெண்கள் பூஷணம், பெண்கள் மாணிக்கம், பெண்ணாரமுதமென்று ஸ்துதிசெய்யும்படி அவர்களைச் சகோதரிகளைப்போலப் பாவித்து அவர்களுடனே கலகமில்லாமல் நேசிக்கவேண்டும்.

நாத்தன்மார்களையும வரிசை வண்மை தவறாமல்அவர்கள் இந்தப் பாக்கியவதிபோலப் பெண்கள் எங்குங் காணக்கிடையார்களென்று சொல்லும்படி நன்றாய் உபசரிக்க வேண்டும்

அடிக்கடி அண்டைவீடு அயல்வீட்டிற்குப் போகலாகாது எவ்விடத்திற்காவது யாதொரு நிமித்தத்தால் அவசியம் போகவேண்டியிருந்தால் சிறிய பெண்குழந்தையையாயினும் வழித்துணையாய்க் கூட்டிக்கொண்டு போகவேண்டுமே யல்லாது தனிவழி நடந்து தண்டுமாரியாய்த் திரியலாகாது.

ஒரு பெண் பேசினால் பூமி அதிரும், இரண்டு பெண்கள் பேசினால் நட்சத்திரம் உதிரும், மூன்று பெண்கள் பேசினால் கடல் சுவறும், நான்கு பெண்கள் பேசினால் உலகம் யாதாகுமோ என்பதனால் யாருடனும் இடியிடித்ததுபோல உரக்கப் பேசாமல் குயில் கூவுதல்போல இனியகுரலாகக் கிளிகொஞ்சுவதுபோல் மிருதுபாஷியாய் வசனிக்கவேண்டும் பெண்டுகள்யிருப்பிடம்பெரிய சண்டை என்கிறார்களே?

கணவனுடைய தேட்டத்தில்வரும் பொருளளவிற்குத் தக்கபடி மிதமாய்ச் செலவு செய்யாமல் கண்டபடிக்கெல்லாம் கைகொண்டமட்டும் செலவழிக்கிருளே இவள் யின்னும் சிலநாளில் அவன்தலையில் ஒட்டைக்கவிழ்ப்பாளென்று பிறரால் இகழப்படாமல் திறமையுடனே சிறுகச் செலவு செய்யவேண்டும்.

உலகத்தார் இராக்காலத்திற்கு உதவியாகப் பகற்காலத்திலும், மழைக்காலத்திற்கு உதவியாகக் கோடைகாலத்திலும், முதுமைக்கு உதவியாக இளமையிலும், மறுமைக்கு உதவியாக இம்மையிலும் வேண்டியவைகளைத் தேடிவைத்துப் பாதுகார்ப்பதுபோல இவ்வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களையெல்லாம் தருணமறிந்து சேகறித்துப்பின்னுக்காகுமென்று சிக்கெனக் காப்பாற்றவேண்டுமே யல்லது வீட்டிலுள்ள பண்டங்களை அனியாயத்தி லழிக்கலாகாது.

ஆணுய்ப்பிறந்தவர் பிதாவானுலும், சகோதரனுனுலும் பெற்ற பிள்ளையானுலும், மற்று மெவரானுலும் அவரிருக்குமிடத்தில் அச்சமின்றி யிருக்கலாகாது. (ஐந்துவயது ஆண் பிள்ளையைக்கண்டால் ஐம்பதுவயது மெண் பிள்ளையும்எழுந்திருக்கவேண்டும்) என்கிருர்கள்.

அன்னம்போலவும் பெண்யானைபோலவும்மிருதுநடையாகத் தலையிறங்கித் தன் பெருவிரலை அல்லது நிலத்தைப் பார்த்தவண்ணமாய் நடக்கவேண்டுமே யல்லாமல் பூமிஅதிரும்படி விசையாய் நடக்கலாகாது.

ஆண்மக்களிலாவது பெண்மக்களிலாவது துஷ்டஜெந்துக்களா யிருக்கின்றவர்கள் தாரதம்மியம் பாராமல்அக்கிரமமாய்ப் பேசினுல் அதென்னஉடம்பிலே காய்த்துத்தொங்குகிறதா "நாய் குலைத்து நத்தம் பாழாகுமா" என்று நினைத்துச் சாதுவாய்ப் போகவேண்டுமே யல்லாமல் அவர்களை எதிரிட்டுப் பத்திரகாளிபோலஅஞ்சாது "தெருச்சண்டைக்கு இடுப்புகட்டல்" ஆகாது.

கணவனுவது, மற்றவர்களாவது ஏதேனும் ஒன்றைக் குறித்துப் பேசிக்கொண்டிருந்தால் "கிணற்றுத்தவளைக்கு நாட்டுவளப்பமேன்" என்று தன்பாட்டிற்குத் தானிராமல் அது என்னசமாச்சாரமென்று அவர்களை நேரே விசாரிக்கவும், சாடையாய்க் கதவின்சந்தில் அல்லது சுவர்க்கோழி போலச் சுவரினருகில் ஒன்றியிருந்து கேட்கவுங்கூடாது.

மணஞ்செய்யப்பட்டு மாமி வீட்டிற்கு வந்தவுடனே "வந்ததே சிறுக்கி பந்தடித்தாள் வரவரச் சிறுக்கி கழுதைமேய்க்கிறாள்" என்னுங் கதைபோல் ஆரம்பசூரத்துவமாய்ச் சர்வ ஜாக்கிரதையுடனே செவ்வையாய் நடந்து பின்பு வரவாச் சோம்பலை மேற்கொண்டு கபடத்தினுல் "எவனோ செத்தான் அவளேன் அழுதாள்" என்பதாக எவ்வளவாவதுசமுசாரக்கூர்மையில்லாமல் கடனற்றதுபோ லிருக்கலாகாது.

புருஷனுக்குப் பொருள் வரவின்றி அவன் வறுமைப் படுங்காலத்தில் (ஏருவிழுகிறவன் என்னசெய்வான் பானை பிடித்தவள் பாக்கியம்) என்று நினைக்கவேண்டுமே யல்லாமல் அவன் சம்பாதிக்க வில்லையென்று மனஞ் சலிக்கும்படி அவனைச் செல்லரிப்பதுபோல யென்னேரமும் வருத்தப் படுத்தலாகாது.

பரபுருஷருடைய முகத்தைப்பாராமலும், அவர்களுக்கெதிரே பல்லைக்காட்டிச் சிரியாமலும், பரியாசஞ்செய்யாமலும் பக்குவமா யிருக்கவேண்டும். "சிரித்தையோ சீரைக் குலைத்தையோ" என்று பழமொழியு மிருக்கின்றதே!

தாமரையில்லாத தடாகமும், சந்திரனில்லாத ஆகாயமும், புலவர்களில்லாத சபையும், அரசனில்லாத நாடும், மந்திரியில்லாத அரசாட்சியும், படைத்தலைவனில்லாத சேனையும், தெய்வஸ்துதியில்லாத நாவும், நற்சிந்தையில்லாத நெஞ்சும், கிருபையில்லாத கண்ணும், பயனில்லாத சொல்லும், மணமில்லாத மலரும்போலக் கற்புடைய மனைவி யில்லாத வீடு சிறப்பின்றி இடுகாட்டுக் கொப்பாகும்.

கண்டவர்கள் கேட்டவர்களெல்லாம் இந்த உத்தமி கல்வியிற் கலைமாதோ, கற்பில் அருந்ததியோ, கருணையிற் பார்வதியோ, பரிசுத்தத்திற் பவானியே, என்று அதிசயிக்கும்படி விவேகமும், கற்பும், இரக்கமும், சுசியுமுள்ளவளாயிருக்கவேண்டும்.

பெற்ற பிதா முதலானவர்கள் தங்கள் பெண்ணைப்பார்க்கும்படி பெண் வாழும் ஊருக்கு வந்தால் திடீரென்று அந்த வீட்டிற்குள்ளே நுழையாமல் பெண்ணின் நடத்தையை அண்டையயலில் விசாரிக்கவேண்டும்விசாரிக்குமளவில் அதுகெட்டது மூதேவி அவள் யாருக்கு மடங்காள்ஒருவர் பேச்சுங் கேளான் "நான்பிடித்த முயலுக்கு மூன்றேகால்" என்று சாதிக்கிறவள், அவள்எல்லாருடனும் வில்லங்கமாக வல்லிடிவழக்குத் தொடுக்கின்ற ஜகஜண்டி, அவள் மூன்று லோகமும் பூசைகொண்ட முழுச்சாமியார், அவள் மானிடவடிவு யெடுத்துவந்த யமராட்சசி, அவள் கொண்டவனைத் துரும்பளவாவது மதியாள், கொஞ்சநாளில் அவன்கழுத்துக்கே கயிறுகொண்டு வருவாள், அந்தக் கரிக்காலிமுகத்தில் விழித்தாலுங் சஞ்சி கிடையாது. அவள் அரைநொடியில் குடும்பத்தைக் கலைத்து குடிவை வேருக்குவாள், அவள் வெல்லசதுரி, வல்லாளகண்டி, அவள் எல்லாருடைய தலைப்பாகையும் தாழ யிறக்கிவைப்பாள், அந்தக் கொள்ளையை என்னென்று சொல்லுகிறது "எண்ணத்தொலையாது ஏடிடங்கொள்ளாது" ஐயோ தர்மதேவதைபோலிருக்கின்ற நீங்கள் ஜன்மாந்திரத்தில் என்னபாவம் செய்தீர்களோ இந்தச்சண்டாளி வந்து உங்கள்வயற்றில் பெண்ணாய்ப்பிறந்தாளே செத்தாலுங் தோஷமில்லை இவள் பெற்றூர் பிறந்தார் பெயரையுங் கெடுக்க வந்தவள், இந்தக் கொடும்பாவி சமாச்சாரத்தைக் கேட்கிறது புண்ணியமா, புருஷார்த்தமா இவள் சரித்திரத்தைப் பேசிய வாயை நெய்விட்டுச் சுத்திபண்ணவேண்டுமென்று நாராசத்தைக் காய்ச்சிக் காதிலே சொருகுவதுபோலச் சொல்லக்கேட்டால் அந்த வீட்டில் எடுத்தடி

வையாமல் முன்னிட்டகாலை பின்னிட்டபடியே திரும்பிப் போய் "சேர்த்திலே யொன்றுகப் பாலைவார்த்துத் தலை முழுகி விடவேண்டுமே யல்லாமல்'' மறுபடி அந்தத் திசையை எட்டிப்பார்க்கலாமா வென்னும்படி துன்மார்க்கியாயிராமல் அம்மம்மா இந்தப் புண்ணியவதிக்கொப்பாக யாரைச்சொல்லலாம் இவளுடைய நன்னடக்கை மற்ற பெண்களுக்குத்தவஞ்செய்தாலும் வருமா பெண்ணுக்கு மெல்லியென்றும், நல்லாளென்றுஞ் சொல்லப்படும் பெயர் இவளுக்கே தக்கது இவளோ மாமனுர், மாமியார் முதலிய சகலருக்குங் கண்ணுக்குக் கண்ணுயிருக்கிறவள், இலள் பத்தரைமாற்றுத் தங்கம், பதிவிரதாசிரோமணி, லட்சுமிக்கும் இவளுக்கும் என்ன பேதம்? இவள்மேல் கிஞ்சித்தாவதுதோஷஞ் சொல்லலாமா, இவள் தீண்டாநெருப்பு, இவளைக்குறித்துத் தோஷஞ்சொன்ன நாவும் அழுகிப்போம் இப்படிப்பட்ட பதவிசுகாங்கள் யெங்குங் கண்டதில்லை இவள் மழைபெய்யென்றுல் பெய்யும், வெய்யில்காயென்றல் காயும்,பொழுதுவிடியென்றுல் விடியுமே அவளைப் பெறும்படி நீங்கள் செய்த புண்ணியமே புண்ணியமென்று செவியில் அமிர்தத்தைச்சொரிவது போலச் சொல்லக்கேட்டால் அப்பொழுது புத்திர சத்குணம் புத்திரியென்று நினைத்துச் சந்தோஷித்து அவர்கள் பெண்ணுக்கு மாமிவீட்டில் தாராளமாய்ப் பிரவேசிக்கும்படி அவள் வரன்முறை தவறு தொழுகவேண்டும்.

ஒருவனுடைய மனைவியிடத்தில் நற்குண நற்செய்கைகள் உண்டாயிருந்தால் அம்மனைவியிடத்தில் ஒன்றுமில்லாதிருந்தாலும் எல்லாம் உள்ளனவேயாம். அவளிடத்திலவையில்லாதிருந்தா லங்கெல்லாமிருப்பினும் ஒன்றுமில்லையாம்.

இம்மையிற் கணவனைப் பூசித்தபெண்கள் மறுமையிற் சுவர்க்கத்தில்தேவர்களால் பூசிக்கத்தக்க பெருஞ்சிறப்புப் பெறுவார்கள்.

பெண்கள் தமது கற்பினால் காக்குங் காவலே காவலாவதன்றி அவர்களைக் கணவர் சிறையினாற் காக்குங் காவல் என்ன பயனைச் செய்யும், "அறைக்காத்தான் பெண்டிழந்தான்" என்று சொல்லப்படுகின்றதே.

"விலைமகட் கழகுதன் மேனிமினுக்குதல்" என்பதனால், குலமகட்கு அதுவே விரோதமென்று நினையாமல் ஜன்மாந்தர சுகிர்தத்தால் உண்டாயிருந்தால் அன்னியர்கள் இச்சிப்பதற்கின்றித் தன் கணவன் கண்டு களிக்கும்படித் தன்னை விலையுயர்ந்த வஸ்திரங்களால் அலங்கரித்துக்கொள்ளலாம் அவை யில்லாவிடில் இல்லையேயென்று யேங்கிச் சுமங்கலி தன் முகம் பாழடையவிடாமல் மஞ்சள் குங்குமமாவது அந்த முகத்தில் அணியவேண்டும்.

"மண்ணுக்கட்டி மாப்பிள்ளைக்கு எருமுட்டைப்பணியாரம்" என்பதாகத் தாறுமாறாய்ச் செய்யாமல் காலமறிந்து கிரமமாகப் புருஷனுக்கு ஸ்நானுனுஷ்டானங்களுக்கு யிடம் பண்ணி வேளைக்கேற்ற பக்குவமான போஜனதாம்பூல வஸ்திர பூஷணாதிகளுந் தடையில்லாது அமைக்கவேண்டும்.

மனைவியானவள் சகலவித பூஷணங்களையுந் துறந்திருந்தாலும் மங்கல சூத்திரத்தைமாத்திரம் துறக்கக்கூடாதது போல தந்தை தாய் முதலிய பந்துக்களையெல்லாம் விட்டுப் பிரிந்தாலுங் கணவனைமாத்திரம் பிரிந்திருக்கலாகாது அற்பமாகிய பறவைகளில் அன்றிற்பேடையுமல்லவோ தன்சேவலைப் பிரிந்திருக்கச் சகியாது உயிர் விடுகின்றது.

"பாத்திரமறிந்து பிச்சையிடு கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு" என்பதனால் அறிவொழுக்கங்களிற் சிறந்த சான்றோர்களே தான் பாத்திரர்களாயினும் (பெரியவீடென்று பிட்சைக்குப் போனால் கரியைவழித்து முகத்திலே தடவினார்களென்று) எளியவர்கள் யேளனஞ்செய்யாது அவர்கள் தேகியென்று வந்தால் நாஸ்தியென்றுசொல்லாமல் சிரார்த்தாதிகளில் ராட்சதர்களுக்குப் பிரீதியாகச் செய்யும் பூரிதா

னம்போலாவது அவர்களுக்குந் தம்மா லியன்றமாத்திரம் பிச்சை ஐய மிடவேண்டும் (இல்லையென்றவிடத்தில் பல்லி யுஞ் சேராது) என்கிறார்களல்லவோ!

தாய்வீடு அருகிலிருக்கிறதென்று யாருடனுஞ் சொல் லாமல் நினைத்தபோதெல்லாம் அவ்விடத்திற்கோடி இவள் ஓடுகாலியென்று பெயரெடுக்கலாகாது அடிக்கடி "தாய்வீ டோடிய பெண்ணும், பேயோடாடிய கூத்தும்" ஒக்குமல்ல வோ!

மாமியார் மாமனார் முதலானவர்கள் பெருவயறுகொ ண்ட தறியாமல் சீமந்தத்திற்கு நாள் வைத்துக்கொள்வது போல நாம் தெரியாமல் இந்தப் பெண்ணைக் கொண்டால் சுகப்படலாமேயென்று நினைத்து பகீரதப் பிரயத்தினப்பட் டுத் தேடினதற்குத் தகுதியாய்வாய்க்காமல் (பிள்ளையார் பி டிக்கக் குரங்காய் முடிந்ததுபோல) வந்துலபித்ததே நம்மு டைய துர்ப்பாக்கிய மென்னவென்று அவர்கள் விசனப்ப டும்படி ஏடாகூடஞ் செய்யலாகாது.

சமுத்திரம்போல வற்றாத செல்வத்திற் பிறந்தாலும் வறியவனுக்கு வாழ்க்கைப்பட்டால் அந்தச்செல்வப்பெருக் கையே பாராட்டிச் செருக்கினால் அவனை யசட்டைபண்ணா மல் (மலையிலே விளைந்தாலும் உரலில்வந்து தானேமசி யவேணும்) என்பதற்கிசைய அடங்கி நடக்கவேண்டும்.

"நுண்ணறிவுடையோர் நூலோடுபழகினும் பெண்ணறி வென்பது பேரும்பேதமைத்தே" என்பதனால் தன் பேதை மைக் காரணமாக உலகத்தில் அன்னியராகிய செல்வரின் படாடோபங்கண்டு நெய்க்குடத்தைத்தலையில்வைத்துஎண் ணமிட்டவனைப்போல நாமிந்தச் சீமான்பட்சஞ் சேர்ந்தால் யாதொரு வருத்தமுமின்றி யெக்காலமும் வேளைதவறாது பால் பழங்களுடனே நெய்யாறக் கையாற நல்ல போஜன முண்டு சுகித்து வாசனைத்திரவியங்களால் நலங்கிட்டுக்கொ ண்டுபனினீரில் ஸ்நானஞ்செய்து யிருபக்கத்துமுள்ளகரைக் கும் முன்தானைக்கும் விலையுயர்ந்த முத்து, பச்சை, கெம்பு,

வைர முதலிய துகளை வரிசைவரிசையாகக்கோர்த்து இடையிடையே நெருங்க மல்லிகை, தாமரை, குமுதம்போல விசித்திரமான பூச்சமைத்து பிடித்தால் பிடிக்குள் அடங்கும்படி அதிக நாணயமாகிய இழையால் ஆயிரம்பொன் பெறுற இந்திரவர்ணப் பட்டென்னும் பொற்சரிகைச் சேலையுடுத்தி முத்துக்கச்சுப்பூண்டு மேகம்போலக் கறுத்துத் தழைத்து செய்த்து நெறித்து நெறிந்து சுறிந்து நீண்டுசுருண்டு கடை சூழன்ற கூந்தலை வாசனைசேர்ந்த மயிர்ச்சாந்து பூசி தங்கச் சீப்பு சிக்கங்கோல்கொண்டு சீவிச் சிக்கறுத்து வாரிவகிந்து திவ்யபரிமள புஷ்பமாலைகளை வைத்து முடித்து நெற்றியில் ஜவ்வாது திலர்தமிட்டு கண்ணுக்கு மையெழுதி கழுத்துக்குக் கஸ்தூரி பூசி மார்புக்குச் சந்தனத்தால் தொயில்வரைந்து தோளுக்கு விற்கோலந்தீட்டி, காலுக்குச் செம்பஞ்சூட்டி, கன்னத்திற்குக் கறுப்பெழுதி, உலகமெல்லாம் விலைமதிக்கத்தக்கநவரத்தினகசிதமாகிய தலைப்பணிசெவிப்பணி நுதற்பணிகளும், ஆரகேயூரங்களும் ஜாஜவல்யமாய்ப் பிரகாசிக்க, கைகளில் பொற்சரிகை, பொற்கடகங்கள் விளங்க, கால்களில் ரத்தினச்சதங்கை, ரத்தினச்சிலம்புகள் கலீர்கலீரென்றொலிக்க, நாசியில் வச்சிர நத்து, வச்சிர மூக்கணிகள் கண்கூசும்படி தகதகவென்று ஜொலிக்க, பேசாதிபாதபரியந்தம் பொன்காய்த்தாற்போலத் தோன்ற, மெய்யிற்பூசிய சந்தன குங்கும கற்பூர கதம்பாதி பரிமளவர்க்கம் காத்தூரம் கமகமவென்று மணக்க, வலது முன்கையிற்பற்றிய பூங்கொத்தில் பஞ்சவர்ணக்கிளி கொஞ்ச, அண்டகோளத்தை யளாவப் பளிங்கினல் கட்டப்பட்ட மலைபோலும் பெரியயேழடுக்கு உப்பரிகையில் மாணிக்கமயமான சித்திரமேடை மீது தாதிமார் காம்பரிந்து பரப்பிய மெல்லிய புஷ்பத்தின் மேல்வடிவிற் சிறந்த சில பெண்கள் மேகலைதாங்க, சிலபெண்கள் சாமரைபோட, சில பெண்கள் ஆலவட்டமசைக்க, சில பெண்கள் தாம்பூலமடித்து நீட்ட, சில பெண்கள் பவளக்காளாஞ்சியேந்த, சில பெண்ள் ஆர்த்தியெடுக்க, சில

பெண்கள் கைலாகுகொடுக்க, சிலபெண்கள் நிலப்பாவாடை விரிக்க, சில பெண்கள் பிடித்துவரும் ஆணிமுத்துப் பந்தலின்கீழ்ப் பூங்கொடிபோல் இடையசைய, அன்னம்போல் அடிபெயர்த்து, மதரதிபோற் கைவீசி, கலாபத்தை விரித்து,மயிலுலாவி நடிக்கிறதுபோல உடல் குலுங்கச் சொகுசாகச் சாரியுலாவி நாம் வைப்பாட்டியானாலும் கொண்ட பெண்டாட்டியாகிய கண்ணாட்டிபோ லிருந்து சம்பிரமத்துடனே சகலபோகமு மனுபவித்துக்கொண்டு நல்ல சீமாட்டியாய் வாழலாமே இதைவிட்டு இந்தத் தரித்திரம் பிடித்த காமாட்டிப் படுவானைக் கட்டிக்கொண்டு கற்பழிய வறியவளாகிய தன்னைக் கைப்பிடித்த கணவனைக் கைவிடக்கருதி அவன் மனம்வெதுக்க கொள்ளிகொண்டு சுடுவதுபோலக் கடுஞ்சொற்கள் சொல்லி சீறுமாறு பண்ணலாகாது அப்படிச்செய்தால் “அரசனை நம்பிப் புருஷனைக் கைவிட்டவள்” கதையாய் முடியும் அன்றியும் அது வாய்த்தவீடும்போய் அடுப்பு நெருப்பு மவிந்தாற்போலாகும். மேலும் வியபசாரிப்பட்டமும் பழியும் விளையும் மறுமையில் ரௌரவநரகத்தில் வீழ்ந்து அளவிறந்தகாலம் கொடிய வேதனையு மனுபவிக்கவேண்டிவரும்,

கணவனோடெதிர்த்து நிற்பவள் யமன் அவனுக்குக் காலமறிந்து உண்டி சமையாதவள் தீராத நோய் சமைத்த உணவை அவனுக்குப் பரிமாறி அவன் உண்ணச் சகியாதவள் இல்வாழ் பேய் அன்றியும் இம்மூவருங் கொண்டவன் கழுத்தை யறுக்கவந்த கூரறிவாளாவார்கள்.

மேலுங் கணவனைக் கோபித்து உக்கிரமாய்ப் பார்த்தவள் வேங்கைப்புலியாவாள். அவனை வரம்புகடந்து வைதவள் கொள்ளிவாய்ப் பிசாசுமாவாள். அவனைக்கண்டு எழுந்திராமற் கிடந்தவள் மலைப்பாம்பாவாள்.

பதிவிரதைகள் கணவனது பாதம்விளக்கிய நீரைக் கங்காதீர்த்தமாகவும், அவன் உண்ட எச்சிலைத் தேவதாபிரசாதமாகவும், அவன் பாதசேவையைப் பரமார்த்ததரிசனமாகவும், அவன்வாய்ச்சொல்லையே குரு உபதேசமாகவுங்கொள்

வடுதேயன்றி வேறே தீர்த்தம், பிரமாதம், தரிசனம்மந்திரோ பதேச முண்டென்று மதிப்பதில்லை.

தங்கணவன் மற்றபுருஷர் அவனைக்கண்டு நாம் பெண் ணாய்ப்பிறந்தால் இந்த மகாபுருஷனைத்தழுவலாமேயென்று விரும்பத்தக்க பேரழகுடையவனானாலும் இளங்காளைபோ லும் அதிக யௌவனமுடையவனானாலும் சுரபேத லயபே தந்தெரிந்து நரம்போசையுங் குரலோசையும் வேறுபடாது நயமாகப் பாடுகின்ற சங்கீத சாமர்த்தியனானாலும் தன்னை நோக்கிய பெண்களின் பார்வைகளையெல்லாங் கவர்கின்ற விசாலமாகிய கமலதளம்போன்ற அழகிய பார்வையுடைய வனானாலும் மலைபோல அளவில்லாத பெருஞ்செல்வமுடை யவனானாலும் தமக்கு அவன் சாட்சாது அத்தைமகனானா லும் தாம் அவனுக்கு அம்மான் புத்திரிகளானாலும் பெண்க ளுக்குப் பெரும்பாலும் அன்னியபுருஷர்மேல மனஞ் செல் லுமென்பதனால் பலசித்தங்கொண்டு கற்பழியாமல் அதனை யுறுதிப்படுத்தி நல்லொழுக்கத்தில்நீங்காதுநிற்கவேண்டும்.

வேத மோதுகின்றவர்களுக்கு ஒரு மழையும், செங் கோல் செலுத்துகின்றவர்களுக்கு ஒரு மழையும், கற்புடை யவர்களுக்கு ஒரு மழையுமாக வல்லவோ மாத மும்மாரி பொழிகின்றது.

கிரமந்தப்பிய வேதியர்களுக்கு ஒரு மழையும்,கொடுங் கோல் மன்னர்க்கு ஒரு மழையும், புருஷனைக் கொலைசெய் யும் பெண்களுக்கு ஒரு மழையிமாகவல்லவோ வருஷம் மூன்று மழைகள் தூறுகின்றது.

கற்புநிலைமை

முற்றுப்பெற்றது.

நல்லார் பெரியோ ரென்றணுவுங்கண்ணு ளெண்ணாள் நயமில்லாள்
கல்லாள் மூர்க்கி கடுங்கோபி கபடி யிடும்பி கடுஞ்சொல்லி
பொல்லாக்காளி முழுலோபி பேயி நாயி பெரும்பாவி
எல்லாக் குணமும் படைத்தாளே யிவள்தான் விகடச் சமுசாரி.

சுகந்த

பரிமள சாஸ்திரம்.

இந்த பரிமளசாஸ்திரத்தில் கண்டிருக்கும் வாசனைதிரவியங்களை எல்லாவர்த்தகரும் யெல்லாசீமான்களும் அவரவர்களே செய்துக்கொள்ளலாம். அவ்வளவு பரிஷ்காரமாய் அச்சிட்டிருக்கிறது.

புஷ்பபேதிகள்.

மல்லிகை புஷ்பத்தை முகர்ந்தால் பேதியாகும் முறை
ரோஜா புஷ்பத்தை முகர்ந்தால் பேதியாகும் முறை
செவ்வலரி புஷ்பத்தை முகர்ந்தால் பேதியாகும் முறை
எந்த புஷ்பத்தை முகர்ந்தாலும் பேதியாகும் முறை
தொப்புளில் தடவினால் பேதியாகும் முறை
தாம்பூலந் தின்றால் பேதியாகும் முறை
உள்ளங்காலில் தடவினால் பேதியாகும் முறை
காப்பித்தண்ணீரில் நீராகாரத்தில் பேதியாகும் முறை
எலுமிச்சம் பழத்தை முகர்த்தால் பேதியாகும் முறை.

சுகந்த பொடிகள்.

சுகந்த மூக்குத்தூள் செய்யுமுறை
சுகந்த வாழைப்பழ மூக்குத்தூள் செய்யுமுறை
சுகந்த மல்லிகைப்பு மூக்குத்தூள் செய்யுமுறை
சுகந்த ஜெகன்மோகன ஸ்தானப்பொடி செய்யுமுறை
சுகந்த கலவைப்பொடி செய்யுமுறை
சுகந்த கூந்தல்தூபம் செய்யுமுறை
சுகந்த மகா கூந்தல் தூபம் செய்யுமுறை
சுகந்த சிக்ஸாப்பொடி செய்யுமுறை
சுகந்த கதம்பப்பொடி செய்யுமுறை.

அத்தர்பில்லை ஊதுவத்திகள்.

புதுக்கோட்டை சமஸ்தான அத்தர்பில்லை செய்யுமுறை
மைசூர் அத்தர்பில்லை செய்யுமுறை
பெங்களூர் அத்தர்பில்லை செய்யுமுறை
டில்லி ஊதுவத்தி செய்யுமுறை
தஞ்சாவூர் ஊதுவத்தி செய்யுமுறை
புதுக்கோட்டை ஊதுவத்தி செய்யுமுறை
வெள்ளை ஊதுவத்தி செய்யுமுறை
வதனகாந்திபில்லை செய்யுமுறை
முகவஜீகரபில்லை செய்யுமுறை.

பரிமள சாஸ்திரத்தில் அடங்கியவைகள்.

பரிமள எண்ணெய்கள்.

புனுகுசுகந்த எண்ணெ செய்யுமுறை
மயிர்வளரும் பரிமளதைலம் செய்யுமுறை
சம்பங்கி எண்ணெ செய்யுமுறை
சந்தன எண்ணெ செய்யுமுறை
மதனகாமேசுரப்பூ எண்ணெ செய்யுமுறை
சாமந்திப்பூ எண்ணெ செய்யுமுறை
ஹேர் ஆயில் செய்யுமுறை
சுகந்த கிரோஞ்சனி ஆயில் செய்யுமுறை
ரோமசங்காரி பஸ்பம் செய்யுமுறை
நரைமயிர் கருப்பாக்கும் முதல்தரம் எண்ணெ
கப்புபஸ்பம் செய்யுமுறை
அனுபவ சந்தனாதித்தைலம் செய்யுமுறை
அரக்கு சந்தனாதித்தைலம் செய்யுமுறை
கஸ்தூரி தைலம் செய்யுமுறை
சிறு சந்தனாதித்தைலம் செய்யுமுறை

ஷர்பத்துகள்.

நன்னாரிவேர் ஷர்பத்து இங்கிலீஷ்முறை
சந்தன ஷர்பத்து செய்யுமுறை
திராட்சைப்பழம் ஷர்பத்து செய்யுமுறை
எலுமிச்சம்பழ ஷர்பத்து செய்யுமுறை
நாரத்தம்பழ ஷர்பத்து செய்யுமுறை
மாதுளம்பழ ஷர்பத்து செய்யுமுறை
இஞ்சி ஷர்பத்து செய்யுமுறை
ரோஜாப்பூ ஷர்பத்து செய்யுமுறை
தாமரைப்பூ ஷர்பத்து செய்யுமுறை
நவாபுகள் தாஜா ஷர்பத்து செய்யுமுறை

பாம்பு தேளுக்கு கைகண்டமுறை.

தேள் விஷத்திற்கு செய்யுமுறை
பாம்பு விஷத்திற்கு செய்யுமுறை

இன்னும் அனேகமுறைகள் அடங்கியிருக்கிறது.
இதன் விலை அணா-8

☞ சிறுமணவூர், முனிசாமிமுதலியார் கம்பெனி
பெரம்பூர் பாரெக்ஸ் போஸ்டு மதராஸ்-என்றெழுதவும்.

பதிவிரதைகள் சரித்திரம்

அருந்ததி - சீதை - அகலிகை - மண்டோதரி - நளாயினி - தமயந்தி - சந்திரமதி திரௌபதை - சாவித்திரி இவர்கள் மாத்திரம் பதிவிரதைகளென்று உலகத்தில் பயிரங்கமாய் தெரிந்திருக்கின்றார்கள். சமயோசிதமாகவும் பழமொழிக் கதையாகவும் சொல்லிக்காட்டுவார்கள். கதையாகவும் சரித்திரமாகவும் படித்து வருவதும் வழக்கம். (ஆனால்) தெலுங்கு சமஸ்கிருதம் - நாகரம் முதலிய பூர்வீக பாஷைகளிலிருந்து யாரும் மொழிபெயர்த்து அச்சிடவில்லையாகையால் மேற்சொன்ன பிரதி பாஷையில் அநேகநூலை ஆராய்ச்சிசெய்து

அநசூயை கற்பு	சுநீதியம்மன் கற்பு
ஜெயப்பிரதை கற்பு	லோபாமுத்திரை கற்பு
சந்தியாவதி கற்பு	சொக்குபாய் கற்பு
சாருமதி கற்பு	கமலாபாய் கற்பு
பிரபாவதி கற்பு	மீராபாய் கற்பு
இந்திரசேனை கற்பு	இலக்குமிபாய் கற்பு
மமதாதேவி கற்பு	சோமளாபாய் கற்பு
ருக்குமணி கற்பு	சுந்தராபாய் கற்பு
புஷ்பவேணி கற்பு	கனகம்மாள் கற்பு
சுமதிதேவி கற்பு	காமம்மாள் கற்பு

இம்மாதிரி 44-பதிவிரதைகள் சரித்திரமும் சகலரும் சுலபமாய் படித்தறியும்படி தமிழ் பாஷையில் மொழிபெயர்த்து அச்சிட்டிருக்கின்றது சுமார் 420-சைட்டுகளுள்ள பெரிய புத்தகம்.

இதன் விலை அணா 12.

நஷ்டஜாதக கணிதம்.

இந்த நஷ்டஜாதககணிதமென்னும் சாஸ்திரமானது ஜாதகமில்லாத யவர்க்கும் அவர்கள் பிறந்த வருடம் மாதம் தேதி வாரம் லக்கினம் இவைகளை குறித்து ஜாதகம் எழுதிக்கொள்ளக்கூடிய அபூர்வமான சாஸ்திரம் அஷ்டவர்க்கம் முதலிய பாடல்களும், ஆரூட சிந்தனைகாண்டமும் அடங்கியிருக்கின்றது சோதிடத்திற்கு மிகவும் உபயோகமானது.

இதன் விலை அணா-8.